www.padippakam.com

தி்பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டுள்ளது

93 மே அணி 2 படை 10 நன்கொடை 7

மக்கள்விடுதலை முன்னணியின் உத்தியோக பூர்வ செய்தித்தாள்.

## ஜே.வி.பி யினால் வீட்டுக்கு நிழல்!

கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலின் போது ...தேசிய முன்னணி அபேட்சகர் (இப்போது ...சபை உறுப்பினர்) ரினால், கோட்டேகொட ...உட பெலிதெனிய கிராமத்தில் வீடில்லாது ...த்துக்கொண்டிருந்த ஓர் ஏழை குடும்பத்துக்கு ...ம் வீடுகட்டி தருவதாக பகிரங்கமாகவே ...க்கிளித்துள்ளார். பேச்சுக்கு மாத்திரம் ...ரையறுக்கப்பட்ட அந்த வாக்குறுதியை ...ந்துவிட்ட இந்த பி.சபை இந்த கிராமத்தின் ...கம் தலைகாட்ட மறுத்தபோது. பெலிதெனிய ...ாம மக்களும் முற்போக்கு இளைஞர்களும் ...ந்து இந்த குடும்பம் முகம் கொடுத்திருந்த ...லமையை போக்க முன்வந்து ...ட்டப்பட்டுக்கொண்டிருந்த வீட்டு கூரைக்கு ...வையானவற்றை கேட்டு ஜே.வி.பி யின் ...க்வெல்ல பி.சபை உறுப்பினர் நாடி இந்த ...ட்டுக்கான குறைபாடுகளை நிவர்த்திசெய்து ...நம்படி கேட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து ...டனடியாக செயல்பட்ட இவர் ஜே.வி.பி ...தரவாளர்களின் ஒத்துழைப்போடு வீட்டு ...றைபாடுகளை பூர்த்திசெய்துள்ளனர். இதன் ...ன்பு முன்பு வாக்குறுதியளித்த பொ.முன்னணி ...றுப்பினர் முற்றாகவே தலைகாட்டமறுப்பதாகஅப் ...ரதேசவாசிகள் கூறுகின்றனர்.

## பேராசியரும் வதைக்கும் சட்டமூலத்திற்கு எதிர்ப்பு!

கல்வி அமைச்சால் கொண்டுவரப்பட்ட ...ாணவர் அடக்குமுறை சட்டத்தை கண்டித்து ...988 மார்ச்,

27 ம் திகதி ஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் ...ாணவர் பேரவையினால் ஏற்பாடு ...செய்யப்பட்டிருந்த ஆர்பாட்டத்தின் முடிவில் ...ாணவர்களை வதைக்கும் சட்டத்திற்கு எதிராக ...உப வேந்தரிடம் மகஜரொன்றை ...கையளித்துள்ளனர்.

அப்போது உபவேந்தரும் இந்த வதைக்கும் ...சட்டமூலத்தை எதிர்ப்பதாக கூறியுள்ளதாக ...செஞ்சக்திக்கு' தெரிய வருகிறது.



## ஜே.வி.பி இனவாத கட்சியா?

### பதில் உள்ளே பார்க்கவும்

ம.வி.மு. பொதுச்செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்களுடன் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்று உள்ளே

பக்கம் 4.5 பார்க்கவும்

# பில்-வருகையின் நோக்கம் என்ன ?

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் நிரந்தர பிரதிநிதியும் பில் கிளின்டன் அரசாங்கத்தின் முக்கிய புள்ளியாக கருதப்படும் பில் ரிச்சர்ட்சனும் தென்னாசிய விவகாரகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் இன்டர்போத் உள்ளிட்ட குழுவொன்று கடந்த சில தினங்களுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை ஜனாதிபதியுடன் நேரடி, மறைமுக பேச்சுவார்த்தைகள் பலவற்றை நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன இப்பேச்சுவார்த்தையின் அடிப்படை நோக்கங்கலாக அமைந்திருப்பது, சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களை மென்மேலும் எதிகளாக்குவதற்காக பிரிவினைவாத குறிக்கோளை வெற்றிபெறச் செய்வதற்காகவும், அதற்காக எல்.ரீ.ரீ.ஈ.க்கும் அரசாங்கத்துக்குமிடையே சமரச பேச்சுக்கு கொண்டு வரும் குறிக்கோளே பிரதான்மாக அமைந்திருப்பதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்திலிருக்கும் அதி மேற்றானியர் தோமஸ் சந்திரநாயகத்தை சந்தித்த எல்.ரீ.ரீ. ஈ தலைவர்கள் முன்றாம் தரப்பினரின். மத்தியஸ்த்தின் கீழ் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடியும் எனக் கூறியிருக்கின்றனர்.இது நோத்தோடு அமெரிக்க பிரதிநிதியின் காய் நகர்த்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான முறையில் மைதானத்தை தயார் செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. அந்த அறிக்கையை அடிப்படை ஆதர்ரமாக்க கொண்டு பில் ரிச்சர்ட்சன் உள்ளிட்ட குழுவினர் வலியுறுத்தியிருப்பதும்., உடனடியாக பேச்சுவர்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்றும் அதற்காக தாம் முன்றாவது தரப்பில் மத்தியஸ்தம் வகிக்க தீர்மானித்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளும் பில் ரிச்சடர்சனை சந்தித்து போது தாங்களது பிரச்சினைக்கு நாம் நேரடியாக தலையிட தீர்மானித்திருப்பதாக அமெரிக்க பிரதிநிதிக் குழவினர் கூறியுள்ளதாகவும் தெரியவருகிறது. இதற்கு தமிழ் கட்சிகள் கூறியிருப்பதாவது உடனடியாக அமெரிக்கா இந்த பிரச்சினையில் தலையிட்டு தீர்வு தேடித்தரும் படி கேட்டுள்ளதாகவும் தெரிவருகிறது. அதற்காக தமது பூரணமான ஆதரவை அமெரிக்கவுக்கு பெற்றுத்தருவதாக தமிழ் கட்சி பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

இதற்கிடையே, பில் ரிச்சர்ட்சன் உள்ளிட்ட அமெரிக்க தூது கோஷ்டி கால தாமதமின்றி அரசாங்கத்தின் அதிகார பரவலாக்கள் மரணப் பொறி யோசனையை நடைமுறை படுத்த வேண்டுமெனவும், எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தையும் அவ்வாரான இணக்கப்பாடொன்றுக்கு கொண்டுவரக் கூடிய வகையில் அதை மேலும் விரிவுபடுத்த வேண்டுமெனவும் அரசாங்கத்திடம் சுட்டிகாட்டியுள்ளனர். இந்த பேச்சுவார்தைகளுக்கிடையே இலங்கையிலுள்ள இயற்கை வளங்கள் பலவற்றினைப் பற்றியும், குறிப்பாக இலங்கையின் பாதுகாப்பு நிலமைகள் தொடர்பாகவும் ஜனாதிபதிக்கும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கிடையே கருத்து பரிமாறப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

பிரிவினைவாத குறிக்கோளை வெற்றி பெறச் செய்யும் பாரிய தேவையில் மிதக்கும் அமெரிக்கா, இலங்கை வாழ் தமிழ், சிங்கள், முஸ்லிம், மக்களை பிரித்து துண்டாடி இலங்கையை மென் மேலும் நலிவடைந்த நாடாக மாற்றும் நோக்கத்திலிருக்கும் அமெரிக்கா தேசிய பிரச்சினையை பயன்படுத்துவதன் மூலம் சகல மக்களையும் மரணப் பொறியில் வீழ்த்தப்படுவதை எவராலும் தவிர்க்க முடியாத ஒன்றென அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

ஒருபுறம் தமது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள எல்.ரீ.ரீ.ஈ யை பயன்படுத்தும் அமெரிக்கா, மறுபுறம் இலங்கை அரசாங்கத்தையும் தனது தேவைக்கேறப் பயன்படுத்துகிறது. இவைகளில் யுத்த தளபாட வியாபாரமும், பெறுமதிமிக்க இயற்கை வளங்களை கொள்ளையிடவும், ( எப்பாவெல பொஸ்பேட் கனிவளத்தை அமெரிக்க விலைக்கு வாங்கியது, அதற்கு முதலீடாக எல்.ரீ.ரீ. ஈ. இயக்கத்தை அமெரிக்காவினால் பெயரளவில் தடைவிதிப்போம் என்ற இணக்கதின் மூலமேயாகும்)

போன்றவற்றை செய்வதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு முடியுமாயிருக்கிறது. இதனால் அமெரிக்காவினால் ஓர் இணக்கத்தை கட்டியெழுப்பினாலும், அது ஒரு போதும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையாதது போலவே, நாடு சதாகாலமும் பாதாளத்தை நோக்கி அமிழ்ந்து மரணப் பொறியில் சிக்குவதை

எவராலும் தடுத்து நிறுத்த முடியாத ஒன்றென பல அரசியல் வல்லுனர்களின் கருத்தாகும், இவ்வாறான போலி இணக்கத்தின் முலம் கட்டியெழுப்பபடும் தற்காலிக மாயஜால மிக்க சமாதானம்

வெடித்து சிதறுவது இன்னும் பல பரம்பரைகளை பலியிடுவதன் முலமே என அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.



மக்கள் விடுதலை முனனணியின் செம் மேதினக் குட்டதில் கலந்துக்கொண்டு மாபெரும் மக்கள் திரளினரை தலமைதாங்கி வழிகாட்டிய ம.வி.மு தலைவர்கள் தோழர் டில்சின் சில்வா (பொதுச் செயலாளர் )தோழர் வில் வீரவங்ச,தோழர் எம்டி குணதிலக,தோழர் குல்ரத்ன,தோழர் அஜித் குமார,தோழர் சமந்த ஆகியோரை படத்தில் காண்கிறிர்கள்.

*ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம். கம்யூனிஸம் என்னும் பூதம். போப்பாண்டவரும் ஜாரரசனும் மெட்டர்னிஹும் கிஸோவும், பிரெஞ்சு தீவிரவாதிகளும் ஜெர்மன் உளவாளிகளுமாய் பழைய ஐரோப்பாவில் சக்திகள் அனைத்தும் இந்த பூதத்தை ஓட்டுவதற்காக புனிதக் கூட்டு சேர்ந்திருக்கின்றது.*

*- கம்யூனிச அறிக்கையில்*

# என்றுமழியா கம்யூனிஸ பிரகடனத்துக்கு 150 வருடங்கள்

150 வருடங்களுக்கு முன்பு இவ்வாறு அன்றைய ஆளும் வர்க்கத்தினால் தூஷிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அறிக்கை இன்று பாட்டாளி வர்க்கத்திற்கும் முற்போக்கு வாதிகளினதும் சமுதாயத்தை வழிநடத்தும் வழிகாட்டி நூலாகும்.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்ற நூல் 1848 ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் ஆசான்களான கார்ல் மார்க்சும் (ஜெர்மன்), பிரெட்ரிக் ஏங்கல்சும் (இங்கிலாந்து) இந்நூலை கூட்டாக எழுதி வெளியிட்டார்கள். பாட்டாளிகளின் விஞ்ஞான பூர்வமான கம்யூனிஸத்தின் மாபெரும் வேலைத்திட்ட ஆவணமாக "கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை பிரகடனம்' அமைந்தது.

116 பக்கங்களை (தமிழில்) கொண்ட இந்தச் சிறிய நூல் லட்சக்கணக்கான புத்தகங்களுக்கு சமனாகும். இன்றைய உலகில் ஸ்தாபன ரீதியான ஒன்றுபட்டு போராடும் பாட்டாளி வர்க்கத்துக்கு இந்நூலின் எழுச்சி ஊக்கமளித்து உயிரூட்டி வழிகாட்டிக் கொண்டிருக்கிறது என்று அன்று லெனின் கூறிய கூற்று இன்றும் உயிரோட்டமிக்கதாகும்.

உறுதியான பொருள் முதல்வாதம் என்ற புதிய உலகக் கண்ணோட்டமும் வர்க்க போராட்ட தத்துவமும் புதிய கம்யூனிச சமுதாயத்தின் சிருஷ்டிகளான பாட்டாளிவர்க்கத்தின் பாத்திரத்தையும் இந்த என்றுமழியாத கம்யூனிஸ்ட் அறிக்கை என்ற மாபெரும் படைப்பு எடுத்துரைக்கின்றது.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை மிகவும் ஆற்றலான உள்ளடக்கம் உள்ள நூலாகும். மார்க்ஸிச லெனினிய களஞ்சியத்தில் மிகவும் சக்திவாய்ந்த முக்கியமான நூலாகும்.

*"இதுகாறும் போற்றிப் பாராட்டப்படும் பணிவுக்கும் பக்திக்குமுரியதாய்க் கருதப்பட்ட ஒவ்வொரு பணித்துறையும் முதலாளித்துவ வர்க்கம் மகிமை இழக்கச் செய்துள்ளது.*




*மருத்துவரையும் வழக்கறிஞரையும் சமய குருவையும் கவிஞரையும் விஞ்ஞானியையும் அது தனது கூலியுழைப்பாளர்கள் ஆக்கிவிட்டது.*

*குடும்பத்திடமிருந்து முதலாளித்துவ வர்க்கம் அதன் உணர்ச்சி நய முகத்திரையை கிழித்தெறிந்து, குடும்ப உறவை வெறும் காசு,பண உறவாய் சிறுமையுறச் செய்துவிட்டது" - கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை.*

இவ்வாறு புனிதத்தன்மைகள் அனைத்தையும் சிறுமைப்படுத்தி உடைத்து நொருக்கும் முதலாளித்துவ வர்க்கம், சமுதாயத்தில் மதிப்புள்ளவர்களது மதிப்பை இழக்கச் செய்துவிட்டது.

முதலாளித்துவம் இவ்வாறு சமுதாயத்தை சிறுமைப்படுத்திக்கொண்டும் மறுபுறம் கம்யூனிசம் காலாவதியாகிவிட்டது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை காலாவதியாகிவிட்டது. சோஷலிசம் காலாவதியாகிவிட்டது என்று கூறுவது இந்த பிற்போக்குவாதிகளின் பண்பாக மாறியுள்ளது. இன்று இவர்களை போலவே மார்க்ஸ் காலத்தில் இருந்த பிற்போக்குவாதிகளும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரகடனம் காலாவதியாகிவிட்டது என்றும் கூறினர்.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்றும் அழியாதது, காலாவதியாகாது, அதன் பிரதான பகுதிகள் இன்றைய நவீன யுகத்திற் எழுதப்பட்டவையாகும்.

உலகில் இன்றும் முதலாளித்துவ உற் முறையும் முதலாளி வர்க்கமும் த ஆட்சிபுரிகின்றன. அதேவேளை பாட் வர்க்கம் இன்றும் சுரண்டப்படும் வர்க்க ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கிறது.

எனவே, இவைகளுக்காக எழுதப்ப கம்யூனிஸ்ட் கட்சி பிரகடனம் எப் காலாவதியாகும்....? இல்லை... ஒருபோ இல்லை.....!.

இன்றைய முதலாளித்துவ உலகம் மு கொடுக்கும் நெருக்கடி இதற்கான சான்றா முதலாளித்துவத்தின் திறந்த பொருளாத தலைக்குப்புற கவிழ்ந்துக்கொண்டிருக் இவ்வேளையில் பாட்டாளிகள் மேன்மே ஒடுக்குமுறைக்குள்ளாகும் இவ்வேளை மாமேதைகளால் எழுதப்பட்ட விஞ்ஞான ரீதி வேலைத்திட்டமான கம்யூனிஸ்ட் க பிரகடனத்தை கையிலேந்திக்கொண்டு அ நடைமுறையில் செயற்படுத்த வேண்டிய கா வந்துள்ளது. இன்றைய உண்மையான மார் லெனினியவாதிகளின் கட்டாய பணி இதுவாகும்.

*"கம்யூனிஸ்டுகள் தமது கருத்துகளை நோக்கங்களையும் மூடிமறைக்க ம ஒப்பாதவர்கள். இன்றுள்ள சமுதாயத் நிலைமைகள் யாவற்றையும் பலவந்தம வீழ்த்தவேண்டும். அப்போதுதான் த இலட்சியங்கள் நிறைவேறும் எ கம்யூனிஸ்டுகள் ஒளிவுமறைவி பறைசாற்றுகின்றார்கள். அஞ்சி நடுங்கட ஆளும் வர்க்கங்கள், கம்யூனிஸ பு வருகிறதென்று. பாட்டாளி வர்க்கம் த அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு எ இல்லாதவர்கள். அவர்கள் வென்று பெறுவ அனைத்து உலகும் இருக்கிறது."*

*உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்*

மார்க்ஸின் 180 வது பிறந்த தினத் முன்னிட்டு இக்கட்டுரை எழுதப்பட்டது. மார்க் தத்துவம் நீடுழி வாழ்க!.

**"சமுதாய வாழ்க்கையெனும் அரங்கினையும் தன்னுள் கொண்டு முரணற்றதாய் அமைந்த பொருள்முதல்வாதம்., வளர்ச்சி பற்றிய மிக விரிவான,மிக ஆழமான போதனையாகிய இயக்கவியல்.,வரக்கப் போராட்டத்தையும்,ஒரு புதிய,கம்யுனிஸ சமுதாயத்தின் படைப்பாளனாகிய பாட்டாளி வர்க்கத்திற்குள்ள உலக வரலாற்று முக்கியத்துவமுடைத்த புரட்சிகர பாத்திரத்தையும் பற்றிய தத்துவம்-இவை யாவும் அடங்கிய ஒரு புதிய கண்ணோட்டத்தை இந்த நுல் மாமேதைக்குறிய தெளிவோடும் ஒளிச்சுடரோடும் எடுத்துரைக்கிறது""**


**-லெனின்-**

# உலக தொழிலாளர் தினத்தை மிகவும் உன்னதமான முறையில் கொண்டாடிய மக்கள் விடுதலை முன்னணி







படங்கள்

(1)மக்கள் விடுதலை முன்னணியின் பிரமாண்டமான பிரச்சார இயக்க கடவுட் ஒன்று

(2)பிரமாண்டமான மேதின ஊர்வலத்தின் ஓர் சிறு பகுதி

(3)மார்க்ஸ்,ஏங்கள்ஸ்,லெனின்,தோ விஜேவீர ஆகியோரின் உருவச்சிலைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ம.வி.மு வின் மேதின மேடை

(4)ம.வி.மு பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா மேதின உரையாற்றும் போது...

www.padippakam.com



# ஐ.தே.க வின் தீர்வு யோசனை

# மாற்றா? மாதிரியா?

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கை தேசிய பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு 'தீர்வுப்பொதி' இப்போது விராந்தாவில் அல்ல சவக்குழியிலேயே அமிழ்துள்ளது. பொ.ஐ.மு தலைவி உட்பட அரசியலமைப்பு கும்பல் எல்லோரும் ஆரம்பம் முதல், இவ்வருட ஆரம்ப சில மாதங்களில் அரசியலமைப்பு பற்றி இறுதி தீர்வை எடுப்பதற்கே எண்ணியிருந்தனர். அதற்கிணங்க அவர்கள் 'தவளம' என்ற யாத்திரையும், சமாதன இயக்கத்தையும் நடத்தி ஏப்ரல் அல்லது மே மாத இறுதிக்குள் தங்களது அரசியலமைப்பு3 'மரணப்பொறிக்கு' சர்வசன வாக்கெடுப்பை நடத்தி முடிப்பதற்கு உறுதிபூண்டிருந்தனர். ஆனால் இவ்வளவு காலமும் அரசாங்கத்தின் வேலை திட்டத்தில் முதலிட்த்தில் இருந்த அரசியலமைப்பு நாடகம் இப்போது கடைசி அத்தியாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக தற்போது வெளிவந்திருப்பது ஐக்கிய தேசிய கட்சியினால் அரசாங்கத்தின் அரசியல்மைப்பு பொதிக்கு மாற்றீடாக முன்வைக்கப்பட்டிருக்கும் 'மாற்று' யோசனையாகும். இப்போது, இந்நாட்டு ஊடகங்களில் குறிப்பிடத்தக்க கவனத்திலெடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு கொண்டிருப்பதும் இந்த யோசனையாகும். ஐ.தே.க, இந்நாட்டு ஊடகங்கள், அரசாங்கமும் கூறுவதற்கிணங்க ஐ.தே.க முன்வைத்திருப்பது 'மாற்றுயோசனையாகும்' அந்த யோசனைக்கும் அதன் செயல்பாடுகளுக்கும் எதிரான விமர்சனங்களை முன்வைப்போர் கூட, அந்த விமர்சனத்ினூடாக அவ்யோசனை 'மாற்று' என்ற முடிவுக்கே வருகின்றனர்.

மாற்று என்பது ஏதாவது ஒரு பொருள் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்தில் அதற்கு மேலாக பண்பு ரீதியில் முற்றிலும மாறுபட்ட ஒன்றாகும.

தமிழ் மொழியில் 'மாற்று' 'மாதிரி' என்ற இரு வசனங்களை பாவிப்பது ஏதாவது ஒரு பொருள் தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்தில், பண்பு ரீதியில் மாற்றமில்லாத (அதாவது மாற்று அல்லாத) பொருளும் இருப்பதால், அவ்வாறன வேளையில் அவைகளை மாதிரி (வடிவம்) என்று எம்மால் கூறப்படுகின்றது. இலங்கை அரசியல் தளத்தில், ஊடகங்களால் பயன்படுத்தப்படும் சொற்கள்எதுவித பொறுப்புணர்வோடு கூறப்படுபவையல்ல. எதாவதொரு பொருளை இனம்காட்டும் போது அது தொடர்பான முழுமையான காரணிகளை கவனத்திலெடுத்து அதற்குறிய விளக்கத்தை தருவதில்லை.

உண்மையிலேயே இவைகளை நோக்குமிடத்து பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் கொண்டு வந்து முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு யோசனைக்கு மாறாக ஐ.தே.க வினால் முன்வைக்கப்பட்டிருப்பது ஓர் மாற்றுயோசனை அல்ல. ஜீ–எல்–பீரிஸ், நீலன் திருச்செல்வம் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட பிரிவினைவாத யாப்புக்கு மாற்றாக முன்வைக்கப்படும் எந்தவொரு யோசனையும், பிரிவினைவாதத்தை தோற்கடிக்கவும் தேசிய இனங்களுக்கிடையில் சமத்துவத்தை கட்டியெழுப்புவதே அடிப்படையாக அமையவேண்டும. இந்த நிபந்தனை பொ.ஐ.மு கொண்டுவந்து முன்வைக்கத்திட்டமிட்டுள்ள யோசனையிலிருந்து முற்றாக மாறுபட்ட பண்பு ரீதியாக பண்பட்ட ஒன்றாகவே இருக்க வேண்டும். ஆனால் ஐ.தே.க வின் போலி மாற்று யோசனை தொடர்பாக நாட்டிலிருக்கும் ஆத்திகமிக்க ஊடகங்கள் எதுவும் கேள்வி எழுப்பு மறுக்கின்றனர்.

பீரிஸ்–திருச்செல்வம் ஆகியோரின் பிரிவினைவாத அரசியலமைப்பு மரணபொறி தொடர்பாக ஐ.தே.க கொண்டுள்ள நிலைபாடு பாரிய முரண்பாடுகளை கொண்டவை அல்ல. முதலில் அவர்கள் இந்த யோசனை தொடர்பாக எதுவும் பேசாது மௌனத்தை கடைப்பிடித்தனர். இறுதியில் அவர்கள் கூறியதாவது அவ்யோசனையில் அடங்கியிருக்கும் பிராந்திய சபைகளை நாம் எதிர்கின்றோம். அதேவேளை அதற்கான அடிப்படை காரணியெதையும் அவர்களால் முன்வைக்க முடியாமல் போய்விட்டது.



பிராந்திய சபை என்பது மாகாணசபைகளினால் பிரிவினைவாத குறிக்கோளை போஷிக்கப்பட்ட அளவை விட அதற்க்கு மேலாக அந்த குறிக்கோளை போஷிக்கும் ஒன்றாகும். அதன்மூலம் குறிப்பிட்ட பிராந்திய சபைகளுக்கு கூடுதலான அதிகாரம் பிராந்திய அரசாங்கத்துக்கு வழங்கப்படும். அரசியலமைப்பு, நிறைவேற்று நீதிமன்றம் போன்ற அதிகாரங்கள் அதன் மூலம் அந்த பிரந்திய அரசாங்கத்துக்கு கிடைக்கும்போது, இதனால் சமத்துவமின்மை நிலவும் அதேவேளை பிரிவினைவாத முறிக்கோள், சக்திமிக்க வல்லமையோடு நிலவும் யுத்ததினால் தனிநாட்டை கோருவோருக்கு சட்டபூர்வமான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுப்பதாகும். பொ.ஐ.மு யின் யோசனையை ஒருவர் எதிர்ப்பாரனால் அதற்கான உண்மையான அடிப்படை காரண்ணை திடமாக தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறில்லாமல் பிராந்திய சபைகளை எதிர்பபெதென்பது அது பொதுசன முன்னணியில் வைபபப்படுள்ளதாலேயே எதிர்ப்பதற்கு சமனாகும்.

ஐ.தே.க கடந்த காலம் பூராவும் கள்ளத்தனமாக செயல்பட்ட அனைத்தின் பலன்களே இவையாகும். உண்மையாகவே பொ.ஐ.மு அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பிராந்திய சபையெனும் யோசனையின் பாதிப்பு தென்படுவது, அதன் மூல்ம் தனி நாடொன்று அமைக்ககூடிய யாப்பு ரீதியான திகாரதைத் அளிக்கபடுவதினாலேயின்றி பிராந்திய சபை என்று அழைப்பிதனாலோ அதுபொதுசன முன்னணியினால் கொண்டு வந்துள்ளதினாலோ அல்ல. பிரிவினை வாதத்தை திருப்தி படுத்துவதற்காக ஐ.தே.க யினால் கொண்டு வந்த மாகாணசபைக்கும் அப்பால் சென்றுள்ளதே பிராந்திய சபைகள் என்பதே உண்மை. ஆனால் அதன் மூலம் மாகாணசபை சரியாதென்றோ, இவைகளே

தேசிய பிரச்சினைக்கு தீர்வாக அமைந்துள்ளதாக அமையாது நடப்பதா மாகாணசபைகளை பெற்றுக் கொடுத்த தைரியத்தின் மூலம் பிரிவினைவாத குறிக்கோளை வெற்றிபெற வைக்கும் சக்கதிகளின் அதன் ஒரு படியாக சென்றிருப்பது இதனோடு முடிவடைவதற்கல்ல. ஆனால் இங்கே இப்போது ஐ.தே.க ஆடியிருக்கும் நாடகம், தம்மாலும் ஒன்று சேர்த்த போஷிக்கப்பட்ட பிரிவினைவாத குறிக்கோளை மூடி முறைத்து, அதை எதிர்க்காமல்; தனது பேய் முகத்தோடு விகாரமான அடிப்படையிலிந்து பொ.ஐ.மு யின் பிராந்திய சபைகளோடு முரண்படுவதேயாகும் அதுவும் உண்மையான காரணதத்தின் அடிப்படையின் மீது எதிர்காலத்தால், அதற்கு மாறாக ஐ.தே.க யினால் முன்வைக்கப்படிருக்கும் எந்தவொரு யோசனையிலும் பிரிவினை வாத நோக்கமும் இனவாதமும் பின்னணி பிணைந்திருக்கும். உண்மையிலேயே நடந்திருப்பது அரசாங்கத்தின் பிரிவினைவாத அரசியலமைப்பு மரணபொறிக்கு எதிராகவே எனக்கூறும் ஐ.தே.க உண்மையிலே செய்யபோவது மாற்று யோசனையெனக் கூறிக்கொண்டு முன்வைத்திருக்கும் யோசனைகள் ஊடாக இலங்கையில் உக்கிரமடையும் தேசிய பிரச்சினை பாதுகாப்தாகவே செயல்பட்டுள்ளனர்.

எனவே, நாம் இந்த யோசனையை விளங்கிக்கொள்ளவேண்டியது மாற்று யோசனை என்றல்ல. மாதிரி யோசனை என்றே நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். அதாவது பொ.ஐ.மு அரசாங்கம் பிரிவினைவாத நோக்கத்தை வெற்றிபெறச் செய்வதற்காக செல்லும் பாதையில் மாதிரியாக (அதற்கு சமமான வேறு) பாதையிலேயே ஐ.தே.க செல்லுகின்றனர்.

இலங்கைக்கு தேவைப்படுவதெல்லாம், சகல இனமக்களையும் பிரதிநித்துவம் செய்யும் படியாக ஜனாதிபதிகளையும் உப–ஜனாதிபதியையும் உருவாக்கும், சிறுபான்மையினை தனியாக பிரதிநிதித்துவம் செய்யும் வெவ்வேறாக நிறுவனங்களை தோற்றுவிப்பதல்ல. சகல இன மக்களுக்கு சமமான உரிமைகள் கிடைக்க கூடிய நிலமைகளில் கீழ் உத்தரவாதமிக்க வாழ்க்கை முறையை உருவாக்கிய பின்பு சிறுபான்மை மக்களின் கலாசார பண்பாடுகளை பாதுகாப்பதற்கேதுவாக சுயநிர்வாக ஆட்சிமுறையை உருவாக்க வேண்டும். அதன் மூலம் ஒரு வழியில் சகல இனமக்களும் சமத்துவ உரிமைகளோடு பொருளாதார வாழ்வில் ஒன்றாக இணைக்கும் கலாசார பண்பாட்டுக்காக வரவேற்பை உறுதிப்படுத்தப்படும். கலாசார பண்பாட்டைக்காண உறுதிபாட்டை அளிப்பது. சமத்துவம் எல்லா இடங்களிலும் வேர்விடும்போது அதன் மூலம் பிரிவினை வாதத்தை அதன் மூலமே தோற்கடிக்க முடியும் என்பதை நாம் தெரிந்துக்கொண்டிருக்கும் தேசிய பிரச்சினைக்கு உறுதியானதும் நிலையானதும் தீர்வை எவராலும் தேடவோ கொண்டுவரவோ முடியாது.

ஆனால் அரசாங்கத்தின் யோசனைக்கு போலி மாற்று யோசனையை முன்வைக்கும் ஐ.தே.க கூறுவதாவது, சமத்துவமின்மையையும் ஜனநாயகமும் இல்லாததை இல்லாதொழிக்கும் தீர்வல்ல. அதற்கு பதிலாக அவர்களால் கூறப்படுவதாவது போாலி ஜனாதிபதியும், உப–ஜனாதிபதியும் போலியாக அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதை பற்றியே கதை அளக்கின்றனர். இதன் மூலம் சகல இனவாதிகளையும் ஒரே முறையில் திருப்தி படுத்துவதையே ஐ.தே.க கையாண்டுள்ளதேயன்றி வேறொன்றுமல்ல. அதாவது அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதை தவிர வேறெதுவுமல்ல.

எப்படியாயினும் இலங்கையில் உள்ள ஊடகங்கள் எதுவிதமான வெட்கக்கேடின்றி இவைகளுக்கு மாற்று யோசனையென்று கூறுகின்றனர். மாற்று என்றால் என்ன? மாதிரி என்றால் என்ன? என்பதை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு குருட்டு தனத்தில் இந்த ஊடகங்கள் வீழ்ந்துள்ளன. இந்த நிலமைகளின் மூலம் கொலைகார ஐ.தே.க வால் பூரணமான இனவாத சேற்றில் அமிழ்த்தியுள்ள யோனைக்கு வல்லமையை பெற்றுக்கொடுத்துள்ளனர். ஆனால் இது மிகவும் குறைந்த ஆயுளை கொண்ட யோசனை என்றே நாம், மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

பொதுசன முன்னணியின் பிரிவினைவாத யாப்பு மரணப்பொறி மக்கள் எதிர்ப்பின் முன்னால் பின்னோக்கி செல்லும் போது, ஐ.தே.க தமது பிரிவினைவாத யோசனையெனும் பெட்டகத்தை 'மாற்று' என்ற நாமத்தை சூட்டி பிரிவினைவாதத்தை வெற்றிபெறச் செய்யும் இலக்கை மென்மேலும் வலுவடையச் செய்துள்ளது. பொதுசன முன்னணியின் தீர்வு யோசனையை எதிர்ப்பதாக கூறி அதன் அடிப்படை அம்சங்களைக் கொண்ட அதேபோன்று யோசனையை சூல மக்களை அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களின் சிந்தனையை சீர்குழைத்து அவர்களை வேறு ஓர் வழியில் பிரிவினை வாதத்தை வெற்றிபெறச் செய்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர். ஜீ.எல்.பீரிஸும், நீலன் திருச்செல்வமும் அந்த குறிக்கோளுக்காக ஓர் பாதையை திறக்கும் போது அந்த பாதை தவறெனக்கூறி ரணில் விக்கிரமசிங்காவின் கும்பல் அதே குறிக்கோளுக்காக வேறு ஒரு திசையில் செல்வதும் இவ்வாறே. அப்போது இந்த இரு வழியிலாவது தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்களை அணிதிரட்ட முடியுமென்று இந்த ஏகாதிபத்தியவாத கைகூலிகள் புரிந்துக்கொண்டிருக்கின்றனர்.

பொதுசன முன்னணி அரசாங்கத்தின் பிரிவினைவாத யாப்பு மரணப்பொறிக்கு எதிராக சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட கொழும்பை மையமாகக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யும் ஒரு சில பிக்குமார் அமைப்புகள் ஐ.தே.க வின் யோசனை தொடர்பாக சந்தேகத்துக்கிடமான போக்கையே கடைபிடிக்கின்றனர். இதன்மூலம் பொ.ஐ.மு கொண்டு வந்த யோசனையை மாத்திரமா இவர்கள் எதிர்க்கின்றனர் என்ற கேள்வி மக்கள் முன் எழுந்துள்ளது. எப்படியாயினும்,

7ம் பக்கம்.......

படிப்பகம்

மக்கள் விடுதலை முன்னணி தொடர்பாக அநியாயமிக்க கருத்துகளை பரப்புவது சிங்கள முதலாளித்துவ ஊடகங்கள் மாத்திரமலல். இலலையென்றால் அரச ஊடகங்கள் மூலம் மாத்திரமல்ல. முதலாளித்துவ தமிழ் பொதுசன ஊடகங்களும் ஜே.வி.பி தொடர்பாக அபகீர்த்திமிக்க பொய்யான, மக்களை அச்சத்துக்குள்ளாக்கும் தகவல்களை தொடர்ந்தும் வெளியிட்டவண்ணமுள்ளது. அவர்களுக்கு தேவைபடுவதெல்லாம் ஜே.வி.பி.க்கு இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்குமிடையே வளர்ந்துவரும் முன்னேற்றகரமான தொடர்பை தடுத்து . சிதைப்பதற்காகும். அதன் மூலம் தமது ஈனத்தனமான அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகும்.

இந்நிலமைகளை கவனத்திலெடுத்த 'செஞ்சக்தி' ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வாவுடன் பேட்டியொன்றை செய்வதற்கு தீர்மானித்தது. ஜே.வி.பி. தொடர்பாக பல உண்மைகளை ஊடாகங்களால் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக. ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வ கருத்தை தெரிவிக்கும் கலத்துரையாடலேயன்றி தேவையற்ற முறையில் கலந்துரையாடலுக்கான தேவை எமக்கில்லை. எமக்கு தேவைபட்டதெல்லாம் தமிழ் மொழி பேசும் மக்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி குறிப்பிட்ட சில காரணிகள் தொடர்பாக கொண்டுள்ள நிலைபாட்டை முன்வைப்பதற்கேயாகும். அவைகள் அனைத்தும் இந்த கலந்துரையாடலின் மூலம் முழுமையடையாவிட்டாலும் குறிப்பிட்டளவு எமது குறிக்கோள் நிறைவேறியிருக்கும் எனப்தே எமது கருத்தாகும். ஜே.வி.பீ.யின் பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா 7 வருடங்களுக்கு மேலாக மெகசின் சிறைசாலையில் இருண்ட சிறைக் கூண்டிவல் வாழ்ந்தவராவார்.

சிறை கூடத்தை சர்வகலாசாலையாக மாற்றிக்கொண்ட ஒருசில அரசியல் கைதிகள் மத்தியில் இவரும் ஒருவராவர் 1994ம் ஆண்டு விடுதலையான அவர் தனது பேரன்புக்குறிய கட்சியான மக்கள் விடுதலை முன்னணியோடு இனைந்து.

மக்களை வழிநடத்த ஆரம்பித்தார். இன்று அவர் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலதிபராவார்.

எமது கட்சியின் தலைவர் தோழர் சோமவங்ச அமரசிங்க வெளிநாட்டில் இருந்துக் கொண்டு, கட்சியின் சர்வதேச செயல்பாடுகளை வழி நடத்தும் அதேவேளை,

இலங்கையில் ஜே.வி.பியின் நடவடிக்கைகளுக்கு தேவையான நெருங்கியதும் நேரடியானதுமான தலமைத்துவத்தை பெற்றுக் கொடுப்பது தோழர் டில்வின் சில்வாதும்.

# ஜே.வி.பி ஒரு இன

# அது இந்நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக உயிர்நீத்து போராடும் புரட்சிகர கட்சியாகும்.


**-ம.வி.மு பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா**

*செஞ்சக்தி :- தற்போது, தமிழ்க்கட்சிகளும் பத்திரிகைகளும் ம.வி.மு ஒரு இனவாதக்கட்சியென்று கூறுகின்றன. இது சம்பந்தமான உங்களது கருத்து.?*



எமது கட்சி எப்போதுமே ஒரு இனவாதக்கட்சியாக இருந்ததில்லை என்பதை.நான் முதலாவதாக சொல்ல வேண்டிய பதில்.அதேபோல் நாங்கள் , மற்றைய இனவாதக் கட்சிகளுக்குச் சார்ப்பான ஒரு அமைப்புமல்ல. தற்போது நாட்டிலுள்ள தமிழ்க்கட்சிகளும் அமைப்புக்குளும் எம்மை இனவாதிகள் என்று சொல்வதற்குக் காரணம். நாம் அவர்களது இனவாதத்துக்குச் சார்ப்பானவர்கள் அல்ல எனபதேயாகும். அநேகமான தமிழ்கட்சிகள் இனவாதத்தை அடிப்படையாக கொனடு அமைக்கப்பட்டவையாகும் எனினும் ம.வி.மு அப்படி அமைக்கப்பட்ட கட்சியல்ல. நாம் சிங்கள தமிழ் இனவாதத்துக்கும் எதிரானவர்கள் என்பதால், வேண்டுமென்றே எம்மைப்பற்றிய பொய்யான தகவல்களைப் பரப்பக் கூடும். சில அமைப்புக்கள், தங்களுக்குத் தெரியாத காரணத்தினால் அப்படிக் கூறவும் முடியும். எப்படியிருப்பினும் நாம் இனவாதக் கட்சியல்ல.

*செஞ்சக்தி :- சண்முகதாஸன் ஒரு தமிழர் என்ற காரணத்தினால் தான் தோழர் விஜேவீரா, சண்முகதாசனை விட்டுப்பிரிந்து சென்றார் என்று கூறப்படுகிறதே இது உண்மையா?*



தோழர் விஜேவீரஅவர்கள் ரஷ்யாவிலிருந்து வந்து கம்யூ. கட்சியின் சீனச் சார்புப்பிரிவில் சேரும் போது சன்முகதாசன் அதில் தான் இருந்தார். எனவே 'சன்' தமிழர் என்ற காரணத்தினால் அங்கிருந்து வெளியேறினார் என்பது பொய். சீனப்பிரிவிலுள்ள அரசியல் தவறுகளுக்கு எதிரான ஒரு கருத்தை அவர் கட்சிக்குள் கொண்டு சென்றார். 'சன்'னின் சந்தர்ப்பவாத செயல்களுக்கு எதிராக கருத்தை கொண்டு சென்றதனால் கோபம் கொண்ட சன்முகதாசன் தோழர் வீஜேவீராவைக் கட்சியிலிருந்து வெளியேற்றினார். அப்படியன்றி அவர் தானகவே கட்சியிலிருந்து வெளியேறவில்லை. சீனச்சார்பு கம்யூ. கட்சியிலிருந்த தவறான அரசியலோடு த்ான் தோழர் விஜேவீராவுக்கு பிரச்சினை இருந்ததேயன்றி சன்முகதாசன் தமிழன் என்ற காரணத்தினால் அல்ல.

*செஞ்சக்தி :- இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற வகுப்பு, தோட்டத் தமிழ் மக்களுக்கு எதிராக தாயாரிக்கப்பட்ட வகுப்பு என்று அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. இதற்கு என்ன கூறிகிறீர்கள்?*



1971 க்கு முன் கட்சியால் நடாத்தப்பட்ட வகுப்புக்களில் இதுவும் ஒன்று. இதன்மூலம் தோட்டப்பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கவில்லை. தமது அரசியல் பொருளாதார ஆதிபத்தியத்தை பிராந்தியத்துக்குக் பரப்பும் விஸ்தரிப்பு வாதக் கொள்கையை இந்தியா கடைபிடித்துக் கொண்டிருந்தது. அப்போது, இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர்களையும் இதற்குப் பயன்படுத்த முயற்சி செய்யப்பட்டது. அதற்குக் காரணம் என்ன வென்றால், அநேகமான தமிழ் மக்கள் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றில்லாதிருந்ததோடு, அவர்கள் தமது தாயகமாக இந்தியாவை ஏற்றுக் கொண்ட மனோநிலையிலும் இருந்தனர். எப்படியிருப்பினும் இது தோட்டத்துறையில் அடிமைகளாக வேதனைக்குள்ளான தமிழ் மக்களுக்கு எதிராக பேசப்பட்ட வகுப்பல்ல. தோட்டத் த்மிழ் பேசும் மக்களைப் பொறுத்த மட்டில், நாம், சரியானதும், தெளிவானதுமான ஒரு நிலையிலேயே உள்ளோம். இது எமது கொள்கை விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தோட்டமக்கள் முகம் கொடுத்த முக்கியமான பிரச்சினை, பிரஜாவுரிமைப் பிரச்சினையேயாகும். நாட்டின் முதலாளித்துவ அரசாங்கங்கள், தோட்டத்தொழிலாளருக்கு பிரஜாவுரிமை கொடுப்பதையோ, அல்லது கொடுக்காமல் விடுவதையோ, தமது அரசியல் லாபத்தைக் கொண்டே தீர்மானித்தனர். 1949ல் பிரஜவுரிமைச்சட்டம் மூலம் ருூ தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோரின் வாக்குரிமைமைப் பறித்தது. அந்தக்காலக் கட்டத்தில் தோட்டப்பகுதி தமிழ் மக்கள் இடது சாரிக் கருத்துடையவர்களாக இருந்த எம்.பி மாருக்கு வாக்களித்த காரணத்தால்தான் அப்படிவாக்குரிமை பறிக்கப்பட்டது. அந்த வாக்குரிமைகள் பறிக்கப்பட்டவேளையில் கூட, தமிழ்த்தலைவர்கள் ருூயேன் பக்கம் சார்ந்திருந்தார்களேயன்றி தமிழ் மக்களின் பக்கம் அல்ல. அதன் பிறகு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி தோட்டத்தமிழ் மக்கள் ஒரு பகுதியினர் இந்தியா செல்லவதற்கும், ஏனையோருக்கு பிரஜாஉரிமை வழங்கவும் முடிவுசெய்யப்பட்டது. இந்தியாவுக்குப் சென்றவர்கள் தமது உறவினர்களைப்பிரிந்து அவர்களது வேதனைகளுக்கும் கண்ணீருக்கும் . மத்தியிலேயே அனுப்பிவைக்கப்பட்டனர். சுய விருப்பப்படியல்ல. இந்த மண்ணில் பல வருடங்களாக உழைத்து, தமது உழைப்பை உரமாகவும் வியர்வையை நீராகாவும் பாய்ச்சிய இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான தோட்டத் தொழிலாளர்கள் தாம் இந்த நாட்டின் பிரஜைகளாவதா. அல்லது இந்தியாவுக்கு போவதா என்பதை தீர்மானிக்க வேண்டியது அந்த மக்களேயல்லாது ஆட்சியாளர்களல்ல. அதன்படி தோட்டத் தொழிலாளர்கள் தாம் இங்கே இருப்பதா, இந்தியா செல்வதா என்பதை தீர்மானிக்க வேண்டியது, அவர்களுடைய பொறுப்பு. என்பதே எமது கொள்கை. தோட்டப்பகுதி தமிழ் மக்கள் அனைவருமே தாம் இந்தியாவுக்குப் போக விரும்பமில்லை இங்கேயேதான் வாழ்வோம் என்று கூறும் பட்சத்தில், அவர்கள் அனைவரையும் இந்த நாட்டுப் பிரஜைகளாக ஏற்று, இந்நாட்டிலுள்ள ஏனைய மக்களைப்போல் சரிநிகர் சமானமாக, சகல உரிமைகளையும் பெற்றமக்களாக அவர்களையும் மதிப்பதே எமது எமது கொள்கை.

*செஞ்சக்தி :- து.ஏ.ீ சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறதா? அது ஏன்? ஏற்றுக் கொள்ள வில்லையானல் அதற்குக் காரணம்.*



துஏீ இனங்களின் சுய நிரனய உரிமையை ஏற்றுக் கொள்ளும் ஒரு கட்சி. ஆனால், நடைமுறையிலிருயிலிருக்கும் அரசியல் நிலைமைகளின் மாற்றத்துக்கு ஏற்ற வகையில் தான் அந்தக் கோஷத்தை நாம் பாவிப்போம். சுய நிர்ணயம் என்ற கோஷத்தைப் பயன்படுத்துவதற்கு நாம் எதிரானவர்கள். ஏனெனில் அது மாக்ஸ் - லெனினிஸத்தை திரிபுபடுத்துதல் ஆகும்.

*செஞ்சக்தி :- சுய நிர்வாகத்தை ம.வி.மு. ஏற்றுக் கொள்கிறதா?*



சுய நிர்வாகத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அது உத்தேச நாடுபிரிக்கும் மாதிரிவடிவத்துக்குச் சமமாக மாட்டாது. எல்லாவற்றுக்கும் முன்பாக, பிரிந்து போகும் தேவையை மக்களிடமிருந்து இல்லாதொழிக்கும் சமுதாயமொன்று ஏற்படவேண்டும். இனப்பிரிவுகளுக்கிடையில் சோஷலிஸத்தின் மூலம் ஒற்றுமையை உறுதிசெய்வதைக் கொண்டே நாம் சுய நிர்வாகத்தைப் பிரேரிக்கிறோம். இது எமது கொள்கை விளக்கத்தின் மூலமும் ஏற்றுக் கொண்ட ஒன்று. இது இலங்கையின் தேசியப்பிரச்சினை சம்பந்தமானது. வர்க்க ரீதியாகத்தான் இதனைத் தீர்க்க வேண்[...] அதனால் எல்லா இனப்பிரிவுகளுக்கிடையே[...] பகைமையை நீக்கக் கூ[...] ஒற்றுமையை உறுதி செ[...] கூடிய சுற்று வட்டத்த[...] சோஷலிஸ சமுதாயத்து[...] கலாசார பாரம்பரியங்கள[...] தனித்துவத்தை பாதுகா[...] சுய நாவாகப பிரதேசங்[...] ஏற்படுத்த நேரிடும்.

*செஞ்சக்தி :- அப்படியா[...] வடக்கு-கிழக்கில் சுய [...] ஏற்படுத்துவீர்களா?*



ஏற்கனவே விளக்கியுள்[...] விஷேடமாச[...] பாட்டாளிவ[...] நிர்வாகத்துச்[...] சிங்கள, தமிழ், முஸ்லிம்[...] ஒடுக்கப்பட்ட மக்களின்[...] மீது எழுப்பப்படும் சோஷ[...] ஆட்சின்யின் மூலம் இனப்பிரிவுகளுக்கு சுய பிரதேசங்கள் பெற்றுக்செ[...] நேரிடும். அது வர்க்க ஒற்றுமையின்மைக்கோ, [...] பிரிப்பதற்கோ வழி கோல[...]

*செஞ்சக்தி :- நாடுமுழுக்[...] வாழும் சிறுபான்மை ம[...] பிரச்சினைகளை எப்படி[...] போகிறீர்கள்?*



சிறுபான்மை[...] என்பது முதலாளித்த[...] பிரசுரம். சு[...] சமத்துவமில[...] ஜனநாயக விரோதம் பே[...] முதலாளித்துவத்தின் மூ[...] ஏற்படுகிறது. சுரண்டலை[...] சமத்துவமின்மையையும் [...] தொழித்து ஜனநாயகத்[...] நிறுத்துவதன் மூலமே சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்குக் தீர[...] முடியும். சோஷலிஸத்தி[...] மட்டுமே அதனைச் சாத்[...] மார்க்ஸ் ஏங்கல்ஸ் கம்[...] அறிகையில் இப்படிக் கூறப்பட்டுள்ளது. "ஒரு[...] வர்க்கத்தால் இன்னொரு[...]

# கட்சியல்ல



ந்வது ரத்துச் செய்யப்படும்
ஒரு இனம் இன்னொரு
விகிதாசாரப்படி
ந்வது ரத்துச் செய்யப்பட்டு
க்கங்களுக்கிடையிலான
ர் ரத்துச்செய்யப்படும்
இனங்களுக்கிடையிலான
ம் விகிதாசாரப்படி ரத்துச்
டு விடும்." நாம் நம்புவதும்
ர்.

*:- இன்று தமிழ் பேசும்
வகுப்பாரும், பத்திரிகைகளும்
சம்பந்தமான
ணியின் நிலைப்பாட்டை
னவாதமென்று அர்த்தம்
னர். இது சம்பந்தமாக
ன்ன கூறுகிறீர்கள்?*

இது ஒரு பரந்த கேள்வி. 'பக்கேஜ்' அதாவது தீர்வுப்பொதி என்பது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத்
தலாளித்துவ அரசாங்கம்
திருக்கும் யோசனைகள்.
இருப்பது
வாதத்தைத் திருப்திப்படுத்தும்,
யத்தைத் திருப்திப்படுத்தும்,
மக்களை சிங்கள, தமிழ்,
இனங்களாகப் பிரித்து
வழியமைக்கும்
தொடு கொண்டுவந்த
மல் வேறொன்றுமல்ல.
த் தமிழ்மகளுக்கு அவர்கள்
என்ற காரணத்தினாலேயே
சினைகள் இருப்பதை நாம்
ம். அதை நாம் ஏற்றுக்
றாம். அந்தப்பிரச்சினைகளின்
ட, சமத்துவமின்மையாகும்.
ளள் எல்லா மக்களையும்
திப்பதில் முதலாளித்துவ
தால்விகண்டுள்ளது.
, உண்ண, உடுத்த
மில்லாத தனாலும்,
மின்மையாலும் எல்லா
ம் மக்கள்
டுகிறார்கள். இதற்கு நல்ல
ம் தான் ஒரு காலத்தில்
றையிலிருந்த தரப்படுத்தல்

முறை. மற்றது, தமிழ் மக்கள் அரசசேவையில் பதவிஉயர்வு பெறுவதற்காக சித்தியடைய வேண்டி சிங்கள தகுதிகான பரீட்சை. இவை முதலாளித்துவத்தின் இயலாமையினதும், அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக இனரீதியாகச் செயல்பட்டதன் விளைவு. சிங்கள அரச மொழியாக்கலும் அப்படித்தான். சிங்கள வாக்குகளை எதிர்ப்பார்த்துச் செய்த தவறான செயல் அது. எனவே, கொண்டுவந்திருக்கும் தீர்வுப் பொதியில் தமிழ் மக்களின் உண்மையானதும், சரியானதுமான பிரச்சினைக்கு (சமத்துவமின்மை) க்குத் தீர்வு இல்லை. அதற்குப்பதிலாக, சமத்துவமின்மை இதன் மூலம் உக்கிரமடையும் இடைவெளி அதிகரிக்கப்படும், ஒற்றுமையின்மை, காணிகளுக்காகவும் கொல்லப்பட்டுக் கொள்ளும் நிலை உருவாகும். இப்படியான ஒரு நிலை தான் தீர்வுப் பொதியின் மூலம் உருவாகும். ஒரே வாக்கியத்தில் சொல்வதென்றால், இந்நாட்டிலுள்ள பாட்டாளிவர்க்க, ஒடுக்கப்பட்ட மக்களை, தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்று இனரீதியாகப்பிரித்து, அவர்களை மிதித்து நசுக்கிக் கொண்டிருப்பது தான் தீர்வுப்பொதி கொண்டுவரப்பட்டதன் நோக்கம். இதனால் தான் நாம் தீர்வுப் பொதியை எதிர்க்கிறோம். இது சிங்கள இனவாத நிலைப்பாடு அல்ல. சரி, நாங்கள் இதனை இப்படிப் பார்ப்போம், இலங்கையில் வாழும் தமிழ்மக்களில் 55ழ தான் வடக்கு – கிழக்கில் வாழ்கின்றனர். ஆகவே, தீர்வுப்பொதியின்படி வடக்கு கிழக்குக்கு தனியான ஆட்சியைக் கொடுத்விட்டால் அணைத்துத் தமிழ் மக்களினதும் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? அப்போது, வடக்குப் பிரச்சினைகளுக்குப் மேலாக, தெற்கில் வாழும் தமிழர்களின் நிலைமை என்ன? தமிழர்களின் பிரச்சினை என்பது வடக்கில் வாழும் தமிழர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் மாத்திரம் தானா? இதற்குப் பதிலளிக்க யாராலும் முடியாது. இந்தப் 'பக்கேஜ்ஜால்' தேசியப் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. 1947 இந்தியா பிளவுபட்ட போதும், தற்போதைய யூகோஸ்லாவியா பிளவு பட்டபோதும் எப்படி ஒருவரையொருவர் கொன்றும், கொல்லப்பட்டுக் கொண்டுமிருந்தார்களோ, அந்த நிலை தான் உருவாகும். அதனால், நாட்டைக் கூறு போடும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் நிரந்தர பிளவுகளை ஏற்படுத்தும், ஒற்றுமையைச் சீர்க்குழைத்து, சமத்துவமின்மையைச் சட்டபூர்வமாக்கும் இந்தத் தீர்வுப் பொதியை நாம் எதிர்க்கிறோம்.

*செஞ்சக்தி :- நீங்கள், வடக்கின் யுத்தத்தைப்பற்றியோ, அங்கு துன்பத்துக்குள்ளாகும் தமிழ் மக்களைப்பற்றியோ கதைப்பதில்லை என்று கூறப்படுகிறதே?*



இல்லை, அது உண்மையல்ல. நாம், வடக்கு தெற்கு என்ற பேதமில்லாமல் யுத்தத்தால் பாதிக்கப்படும் எல்லா மக்களுக்காகவும் யுத்தத்தின் போது கற்பழிப்புக்களுக்கு ஆளாகும் பெண்களைப்பற்றியும், அழியும் தேசிய வளங்களை பற்றியும் கதைக்கின்றோம். நாம் இந்த இனவாதிகளின் யுத்தத்தை முற்றாக எதிர்க்கிறோம். டுவுவுந யின் குண்டுத் தாக்குதல்களினால் தெற்கின் சாதாரண அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையும், வடக்கில் ராணுவக் குண்டுத் தாக்குதல்கள் மூலம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதையும் நாம் வண்மையாக எதிர்க்கிறோம். இரண்டு தாக்குதல் காளையும் ஒன்றாகவே நாம் கணிக்கிறோம். எனவே, யுத்தத்திலீடுபட்டிருக்கும் இருசாராரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்திவிட்டு, மக்களை தாம் விரும்பும் அரசியலினூடாக தமது பிரச்சினைகளுக்கு விடைதேட இடமளிக்க வேண்டும். வடக்கில் நடக்கும் சம்பவங்கள் பற்றியசரியான தகவல்கள் உடனடியாக எமக்குத் தெரிய வராமையே, எமக்குள்ள பெரிய பிரச்சினை. என்றாலும், வடக்கில் கஸ்டப்படும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களைப்பற்றி நாம் சிந்திக்காமலில்லை.

*செஞ்சக்தி :- தற்போது சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளும், தமிழ்ப்பெண் கைதிகளும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதாக சிறைச்சாலை தகவல்களை மேற்கோள் காட்டி சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இது சம்பந்தமான உங்கள் நிலைபாட்டைத் தெளிவு படுத்துவீர்களா?*



சிறைச்சாலையிலுள்ள சில கைதிகளும், அதேபோல் அரசியல் க்ாரணமாக சிறையிலடைக்கப பட்டவர்களும், துன்புறுத்தப்படுகிறார்கள். அது தான் உண்மை. இலங்கைச் சிறைச்சாலைகளிலுள்ள இட நெருக்கடியும், நிர்வாகத்தின் பலவீனமும், பலதரப்பட்ட ஊழல்களும் காரணமாக சிறையிலுள்ளவர்கள் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள் கூட கிடைப்பதில்லை. நானும் கூட 7 வருடங்கள் சிறையிலடைக்கப்பட்டிருந்தேன். அந்த நேரத்தில் எனது அனுபவம் கூட துன்பமானதே. அங்கு சிங்கள–தமிழ் என்ற பிரச்சினையை விட, சிறையினுல் வசதிகுறைவும், கெடுபிடியான நிர்வாகமும் கைதிகளை துன்பத்துக்குள்ளாக்கின்றன. சில அதிகாரிகளின் சிங்கள இனவாத மனோப்பாவத்தின் காரணமாகவும் தமிழ்க்கைதிகள் முக்கியமான பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்படலாம். இது சிங்களக் கைதிகளுக்கு விஷேடசலுகைகள் கிடைப்பதாக அர்த்தமல்ல. நன்றாகக் கவனிக்கப்படுகிறார்கள் என்ற அர்த்தமுமல்ல. சிறைச் சாலைகளில் கைதிகள் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் வழமையான ஒன்று. 1991 மகஸின் சிறைச்சாலையில் வைத்து எம்மைத் தாக்கியதோடு எமது தோழரொருவரையும் கொலை செய்தனர். மகர சிறையில் 3 பேரைக் கொன்றனர். சமீபத்தில் களுத்துறைச் சிறையில் சில தமிழ்க்கைதிகளை அடித்துக் கொன்றனர். இது தான் சிறைச் சாலைகளின் பொது வான நிலை.

*செஞ்சக்தி :- யுத்தத்தின் போது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள் அழிவதைப்பற்றி ம.வி.மு. ஏன் மௌனம் சாதிக்கிறது?*



நான் முன்பே கூறியது போல், நாட்டின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வணக்கஸ்தலங்கள், எந்த இனத்தவர் பாவித்தாலும், அவை இந்நாட்டின் வரலாற்றுக்கும் கலாசாரத்துக்கும் சொந்தமானவை. ஆகவே, நாட்டிலுள்ள எந்த வணக்கஸ்தலத்தையோ, எப்படியான வரலாற்று முக்கியத்துவமான இடத்தையோ யார் தாக்கி அழித்தாலும் அதனை நாம் வண்மையாக எதிர்க்கிறோம். கண்டி தலதா மாளிகைக்கும் சிறிமகா போதிக்கும் தாக்குதல் தொடுத்ததைப் போலவே, வடக்கில் இந்துக் கோவில்களும் வணக்கஸ்தலங்களும் தாக்கி அழிக்கப்பட்டதும் மிகவும் பாரதூரமான தவறாகும். எனவே, யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருசாராரும் இதற்கு பொறுப்பேற்க வேண்டுமென்பதே எமது கருத்து. நாட்டின் கலாச்சாரப்பெறுமதிவாய்ந்த பொருட்களை யார் அழித்தாலும், அது மகா பெரிய அநியாயம். அதனை உடனடியாக நிறுத்த வேண்டும்.

*செஞ்சக்தி :- தோட்ட வேலை நிறுத்தம் சம்பந்தமான உங்களது கருத்து?*



தோட்டப்பகுதியில் வாழும் மக்கள் அநேகமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அவர்கள் இன்னும் அடிமைகள் போலவே வாழ்கின்றனர். அவர்களது கல்வி, சுகாதாரம் போன்ற நலன்புரிகள் இன்னும் அடிமட்டத்திலேயே இருக்கின்றனர். அவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காகப் போராட வேண்டும். அதன் மூலம் தமது உரிமைகளுக்காகப் போராடும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளோம். என்றாலும் இந்தப் போராட்டங்களை வழி நடத்தும் தலைமைகளை நாம் நம்பத் தயாரில்லை. தொண்டமான், சந்திரசேகரன் போன்றவர்கள் முதலாளித்துவ அரசாங்கத்தில் மந்திரிகளாகவும் அரை மந்திரிகளாகவும் உள்ளனர். அவர்களின் தேவை, தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதல்ல. தோட்டத் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்தி விட்டு அரசாங்கத்தை வற்புறுத்தி முதலாளித்துவ அரசாங்கத்திடமிருந்து ஏதாவது ஒரு வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொள்வதே அவர்களது நோக்கம். ஆகவே, தோட்ட மக்கள் தாம் இந்த சந்தர்ப்பவாத முதலாளித்துவ தொழிற்சங்கத் தலைவர்களிடமிருந்து பிரிந்து, தனியான ஒரு அமைப்பு ரீதியில் ஒன்றுபட்டு தமது உரிமைகளுக்காகப் போராட முன் வர வேண்டுமென்பதையே நாம் நம்புகின்றோம்.

*செஞ்சக்தி :- ம.வி.மு தோட்டப் பகுதியில் தொழிற்சங்கம் அமைக்குமா?*



கூடிய விரைவில் தோட்ட மக்கள் மத்தியில் அவர்களுக்கு வழிகாட்டவும் எதிர்பார்க்கிறோம். ம.வி.மு வின் சோஷலிசத் தொழிலாளர் சங்கம் தோட்டப்பகுதியில் புதிய முறையிலான தொழிற் சங்கம் அமைப்பது சம்பந்தமாக ஆலோசித்து வருகிறது. எனவே, தோட்டத் தொழிலாளர்களின் சரியான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இடது சாரி அமைப்பொன்றை அவர்கள் மத்தியில் நிலை நிறுத்த வேண்டுமென்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

*செஞ்சக்தி :- கடைசியாக, தோட்டத் தொழிலாளர் உட்பட அணைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கான செய்தி?*



எமது செய்தி, இந்நாட்டிலுள்ள எல்லா மக்களுமே தற்போதைய முதலாளித்துவ முறையினால் துன்பப்படுகின்றனர். இதற்கிடையில் தமிழ் மக்களுக்கு இன்னொரு அழுக்கமும் இருக்கிறது. [illegible]டியிருப்பி[illegible] தமிழ் மக்கள் அ[illegible]ங்களுக்கு காரணம் சிங்கள மக்களல்ல. அதே போல் சிங்கள மக்களின் எதிரி, தமிழ் மக்களுமல்ல. இந்நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய எமது பொது எதிரி இந்நாட்டின் முதலாளித்துவ முறையேயாகும். ஆகவே நாம் தோற்கடிக்க வேண்டியது முதலாளித்துவ முறையைத்தான். அது சிங்கள மக்களால் தனியாகச் செய்ய முடியாத ஒன்று. சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஒருங்கிணைந்த போராட்டத்தின் மூலமே நடக்க வேண்டிய ஒன்று. எனவே, எல்லா குறுகிய இனவாத மனோபாவத்திலிருந்தும் விலகி, எமது பொது எதிரியான முதலாளித்துவ முறையைத் தோற்கடிப்பதற்காக, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் எல்லோருமே இணைந்து கை கோர்த்துக் கொள்ள வேண்டுமென்றும். அதற்காக எம்மோடு இணையுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

# ஜே.வி.பி ஒரு இனவாத கட்சியல்ல

www.padippakam.com



# சிங்கள பிரபாகரனுக்காக






தற்போதய அரசியல் தளத்தினுள் இனவாதமெனப்படுவது ஏகாதிபத்தியவாதிகளினதும், அவர்களிடம் சரணாகதியாகியிருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளினதும் அதன் கருத்துக்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ இறையாகும் சிறு முதலாளித்துவ கும்பல்களின்தும் ஓர் அரசியல் குறியீடாகும்.

இலங்கையில் அது சிங்கள, தமிழ், முஸ்லிம் முதலாளித்துவ வர்க்கத்தினதும், ஒரு அல்லது இன்னுமோர் சந்தர்ப்பத்தில் இவர்கள் அனைவரும் அதிகாரம் தொடர்பான பிரச்சினையின் போது மிகவும் வரவேற்றபுமிக்க கோஷமாகவும், சிறு முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் மேலான வரவேற்புமிக்க செயல்பாடுகளாகவும் மாறியுள்ளன. ஒரு சந்தர்பத்தில் சிங்கள இனவாதமாகவும், இன்னுமோர் சந்தர்ப்பத்தில் தமிழ் இனவாதமாகவும், மேலெழுகிறது.

சிங்கள சமுகத்தில் முன்னால் சிங்கள இனவாதமாகவும் தமிழ் சமுகத்தின் முன்னால் தமிழ் இனவாதமாகவும் தற்போது சிங்கள சமுகத்தை நன்றாக புலப்படுகிறது. அதேவேளை குறிப்பிட்ட ஒரு சில வேளைகளில் இந்த இரு இனவாதங்களின் மூலம் முஸ்லிம் இனவாதத்தின் தோற்றுவாயும் ஆங்காங்கு ஆரம்பித்த வண்ணமுள்ளது.

இவ்வாறு நீண்ட நாள் சமுக பொருளாதார நிபந்தனையின் முன்னால் வளர்ந்து வந்த இந்நாட்டு தேசிய பிரச்சனை, அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளினாலும். ஏனைய சகல செய்பாடுகளின் முன்னால் தமிழ், சிங்கள, முஸ்லின் மக்களிடையேயான முரண்பாடுகள் வளர்ந்தோங்கும் செயல்பாடுகளாக உள்ளன. இவ்வாறான செயல்பாடுகள் மூலம் புதிய வடிவத்தின் வெளிவந்து கொண்டிருக்கும் சிங்கள இனவாதத்தின் இன்னுமோர் வடிவமே முஸ்லிம் இனவாதமாகும். சிங்கள வீரவிதஹன என்ற பெயரில் முதலாளித்துவ அரசியல் அமைப்புகள் உள்ளேயும் குறிப்பாக வியாபார உலகத்திலும் இனவாத அடிப்படையில் நிலைபெறுவதற்காக முயற்சிக்கும் இந்த இனவாத அமைப்பு சிங்கள மக்களிடையே பல தந்திரோபாயங்கள் மூலம் தமிழ், முஸ்லிம் விரோதத்தை துண்டி தமது குறிக்கோளை பூர்த்தி செய்துகொள்வதற்காக முயற்சித்த வண்ணமுள்ளனர்.

சிங்கள இனவாத சக்திகள் பலவழிகளில் நீண்டநாட்களாக தமது இனவாத தேவைகளுக்காக தோன்றியுள்ள அமைப்புகளை, அதை அதிகாரத்தில் இருந்த ஒவ்வொரு அரசாங்கமும் போஷித்து வளர்த்தனர். எவ்வாறெனினும் சிங்கள இனவாதத்துக்கு 83 ஜூலை இனகலவரத்தோடு தோற்றுவத்த எதிர்ப்பு வடுவும், அதற்கு பதிலாக இலங்கை பாட்டாளிவர்க்க இயக்கம் சமுகத்தில் நிலைபெறுவதோடு இனவாத சக்திகளுக்கு இருந்த செல்வாக்குகள் பின்நோக்கித் தள்ளப்பட்டது.

எப்படியானாலும், பின்தங்கிய பலவீன இலங்கை சமுகத்தில் மேலும் கடுமையாகவும், வேகமாவும் வளர்ந்துக் கொண்டிருந்த பிரிவினைவாதத்தின் முன்னால் சிங்கள இனவாதத்துக்கு இருக்கும் சந்தர்ப்பம் அவ்வாறே சமுகத்தில் நிலவியது. அதன் குறிப்பிட்ட ஒரு வெளியீடாகவே 1995 ஆண்டு ஜூலையில் சிங்கள வியாபார அமைப்புகளதும், முதலாளித்துவ கட்சிகளது ஆதரவாலும் அதன் வழிகாட்டல்கள் ஊடாகவும். இந்த 'சிங்கள வீர விதஹன' பெயரிலான இனவாத கூட்டு ஒன்றுக்கான சந்தர்பங்களை திறந்துவிடப்பட்டுள்ளது. அது வியாபாரிகள் மத்தியில் முடிந்தமட்டும் சிங்கள இனவாதத்தை நிலை நாட்டிக் கொள்வதற்காக முயற்ச்சித்த வண்ணமுள்ளனர்.

அத்தோடல்லாமல் கஷ்டப்பிரதேச மாவட்டங்களில், குறிப்பாக யுத்தத்தினால் நேரடியாக பீடிக்கப்பட்டு கஷ்டபடும் பிரதேசங்களுக்கு சென்று மக்களோடு இணைவதற்கு தயாரகும் இவர்கள் அவ்வாறு செல்லும் ஒவ்வொரு இடங்கிலும் சூழலுக்கேற்ப தமிழ், அல்லது முஸ்லிம் இனவாத எதிர்ப்பை தூண்டிவிட்டு 'சிங்களம் மாத்திரம்' என்ற மனநிலையை உருவாக்கு வதற்கு முயற்சித்த வண்ணமிருக்கின்றனர். இதற்கணங்க இவர்களது முதலாவது அபிப்பிராயம் யாதெனில் விவசாயிகள் மத்தியில் செல்வதே என்பது தற்போது நடைமுறையில் காணக் கூடியதாய் உள்ளது. 'கொவிசெலசிய' என்ற அமைப்பின் ஊடாக முதலாளித்துவ முறையின் கீழ் மிகவும் துன்பகரமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் விவசாயிகளின் ஒரு பகுதியினரை தமது ஈனத்தனமான இனவாத குறிக்கோளுக்குள் சிறைப்படுத்திக் கொள்வதற்கு முயற்சித்த வண்ணமுள்ளனர். பொலன்னறுவ, அனுரதபுரம், ஹம்பாந்தோட்டை, போன்ற மாவட்டத்தில் வாழும் சிங்கள விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதாக கூறி இவர்களது வர்க்க வலையை விரித்துள்ளனர்.

திறந்த பொருளாதார போட்டியின் முன்னாலும் பலவீன முதலாளித்துவத்தின் முடியாமையினாலும் பின்னோக்கித்தள்ளப்படும் அச்சுறுத்தலின் முன்னால் இவ்வாறான இனவாத அடிப்படையை அடிநாதமாக கொண்ட இனவாத சக்திகளோடு சேர்ந்து தமது குறுகிய பிற்போக்கு அரசியல் தந்திரோபாயங்களை நகர்த்தியுள்ளனர். அவர்கள் சிங்கள வியாபார ஸ்தாபனங்களில் மாத்திரம் பொருட்களை வாங்குவது முதல் 'சுத்த சிங்களம்' த்திற்காக மக்களை கொண்டுச் செல்வதற்கும் எத்தனிக்கின்றனர். விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலை நிர்ணய்த்து வாங்குவாதாக கூறியும் நெருங்கியுள்ளனர். 1998ம் ஆண்டை தேசிய வருடமெனக்கூறி விவசாய பொருளாதாரத்துடன் விவசாயிகளை கட்டியெரப்புவதற்கு பணியாற்றுவதாக கூறும் இவர்கள், அதன் மூலம் விவசாய உற்பத்திகளுக்காக வியாபாரிகளை அணிதிரட்டுவதாகவும் கூறிவருகின்றனர். அதேவேளை, இவர்களது இனவாத அரசியல் கருத்துகளை அவர்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர்.

இந்த கருத்துக்களை இளைஞர்,மாணவர்,பெணகள், முன்னணிகளை நேக்கி கொண்டு சென்றஇ போதும் ஆனால் எதுவித பயன்களையும் தரவில்லை.எப்படியாயினும் இவ்வாறான போக்குகள் ஒவ்வொரு வழியிலும் தொடர்ந்தும் இனவாதத்தை போஷிக்கும் என்பது மிகவும் தெளிவான ஒரு காரணியாகும். அதன் முக்கிய காரணி என்னவெனில் இவ்வளவு காலமும் இடைக்கிடையே தலைதூக்கினாலும் ஸ்தாபனப்பட முடியாது போன முஸ்லீம் இனவாதத்திற்கான நிலையான பாதையை திறந்திருப்பதேயாகும்.

ஆயுதம் தரித்த தமிழ் இனவாத இயக்கத்தின் பின்னணியாக செயல்பட்ட பிரதான தமிழ் முதலாளித்துவ இயக்கம் தமிழர் விடுதலை கூட்டணியாகும் இது 1972 இதற்கு சமமான கட்சிகளோடு ஒப்பந்தங்கள் ஏற்பட்டதோடு இறுதியாக வட்டுககோட்டை மாநாட்டின் மூலம் தமிழ் ஈழத்திற்கான ஸ்தாபனரீதியாகவும் நேரடியாகவும் அறிவித்தனர். ஆயினும் அது தரப்படுத்தல் முதல் சிங்கள இனவாதமும் பின்பு தமிழ் இனவாதத்தினதும் ஸ்தாபனப்பட்ட அறிவிப்பாகும்.

83 கறுப்பு ஜீலையை நிர்மானித்து ஜயவர்த்தன ஆட்சியின் ஊடாக சிங்கள இனவாத ஒரு குறியீடாக மேடைக்கு வந்ததுபோல் ( அப்போது சிங்கள வியாபாரிகள் மத்தியில் இருந்த 4ம் குறுக்குத்தெருவின் அதிகாரத்தை கைப்பற்றல்) அதற்கு எதிர்ப்புரமாக ஆயுதம் தரித்த தமிழ் இனவாத செயல்பாடுகள் மூலம் பிரச்சினை மேலும் உக்கிரமடையச் செய்தது. இப்போது அதாவது புதியவடிவில் முஸ்லீம் இனவாதம் மூலம் தோன்ற ஆரம்பித்துள்ளது. ஒரு புற முஸ்லீம் பிராந்தியத்தை உருவாக்கி தோற்றுவிக்க தயாராகும் பிராந்திய சபைகளும் அரசாங்கத்தின் ஊடாகவும் மறுபுறம் முஸ்லிம் காங்கிரஸ் ஊடாகவும் நேரடியாக முஸ்லிம் இனவாதமும் அதனிடையே தோன்றும் சிங்கள இனவாதமும் அதன மூலம் முஸ்லிம் மக்களிடையே தோற்றுவிக்கும் எதிர்ப்புணர்வும் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்துவது தவிர்க்கமுடியாக காரணியாகும். ,

1977 ல் பொது தேர்தலின் போது வட-கிழக்கு தனிநாடு கேரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட தமிழர் விடுதலை கூட்டணியின் தமிழ் இனவாத போக்கு கிழக்கில் தோல்வியை தழுவிய அதேவேளை,

அதன் மறு பங்காளியான அப்போதய ஸ்ரீ.ல.சு.கட்சி கூட்டரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்த பதுதின கிழக்கில் தனியான முஸ்லிம் அரசொன்றுக்கான அதாவது கிழகிஸ்த்தானுக்கான கோரிக்கையும் தோல்வியடைந்ததும்.

7ம் பக்கம்........



## 'சிங்கள வீர விதஹன' கொள்கைகள் – முடிவுகள்

(1) சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்ட சிங்களம் பேசும், சிங்கள பழக்க வழக்கங்களையும் நடவடிக்கைகளின் தன்மைகளை மதிக்கும் அனைவரும் சிங்களவர்களாக மதிக்கப்படுவர்.

(2) புதிய வியாபார முதையை சிங்களத்தன்மைக்குள் ஒருங்கிணைக்கக் கூடியவகையில் செயல்பட வேண்டும் வெளிநாட்டு அறிகுறிகளோடு கூடிய வியாபார முறைகளை சிங்கள மயப்படுத்தப்பட வேண்டும்.

(5) சிங்களவர்களின் பொருளாதரத்தைப்பலம் பெறச் செய்வதற்காக நுகர்வோரின் விருப்புக்கள் மாற்றப்டும். அதாவது சிங்களக்கடைகளிலும் சிங்களஉற்பத்தியாளர்களினதும் பொருட்களை மாத்திரம் சிங்களவர்கள் விலை கொடுத்து வாங்க வேண்டும்.

(9) சிங்களவர்கள் ஒற்றுமையாகும் பட்சத்திலும் பொருளாதாரம் சிங்கள மயப்படுத்தப்படுத்தலும் நிறைவேதிய பிறகு 'சிங்கள வீர விதஹனவின் செயல்கள் அநேகமாக பூரணப்படுத்தப்பட்டுவிடும்.

படிப்பகம்

www.padippakam.com



3ம் பக்கத் தொடர்
ஐ.தே.க தீரவு......

ஐ.தே.க என்பது பிரிவினைவாதத்தை போஷித்த அபகீர்த்திமிக்க அமைப்புக்கு சாதகமான முறையில் பொ.ஐ.மு அரசாங்கத்தின் பிரிவினைவாத யாப்பு மரணப்பொறிக்கு குறிப்பிட்ட எதிர்ப்பை தீர்மாணிப்பதென்பது, அரசியலின் தவறென்றடிப்டையில் அல்ல அரசியல் துஷனமென்றே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். எனவே தேவைபடுவதெல்லாம். இந்த இரு அணிகளையும் ஓரணியில் வைத்து, இந்த இரு அணிகளதும் போலி தீர்வு யோசனைகள் மூலம் வெளிக்கொணர்ந்திருக்கும் பிரிவினைவாதத்தை மேலும் போஷிக்கவும், தேசிய பிரச்சினையை மென்மேலும் உக்கிரமடையச் செய்வதற்கு இவர்களால் முன்கொண்டுவரும் முயற்ச்சியை முற்றாக தோற்கடிப்பதேயாகும். அவ்வாறில்லாமல், பிரிவினைவாதத்தை போஷிக்கும் ஏகாதிபத்தியவாத இரு பொம்மைகளின் ஒரு பிரிவினருக்கு மாத்திரம் பிரிவினைவாதத்தை எதிர்ப்பதென்பது, மறு பிரிவினரால் தந்திரோபாய ரீதியில் கொண்டுவரும் பிரிவினைவாதத்தை வெற்றிபெறச் செல்வதற்கு சமமாகும். அவ்வாறு செல்வோமானால் இறுதியில் பிரிவினவாதத்தை தோற்கடிப்பதென்பது போலியான கண்துடைப்பு வித்தையாகும். இதனாளல் பொதுசன முன்னணியின் அரசியலமைப்பு மரணப் பொறிக்கு போலவே ஐ.தே.க வினால் கொண்டுவரும் (மாற்று அல்ல) மாதிரி யோசனையும் எதிர்ப்பதென்பதை இன்றைய கட்டாய கடமைகளின் ஒன்றாகும்.

6ம் பக்கத் தொடர்
சிங்கள பிரபாகரன்.......

இவ்வாறு 1977 தேர்தலின் போது பதுதீன் மொஹமட்டால் கொண்டுவதப்பட்ட தனி முஸ்லிம் நாடு கோரிக்கை இப்போது பொதுஜன முன்னனி அரசாங்கத்திலிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் உயர்த்தி பிடித்துள்ளார் உண்மையாகவே 1977 வட்டுக் கோட்டை மாநாட்டின் மூலம் தமிழ் ஈழத்திற்கன ஸ்தாபன ரீதியான அடித்தளத்தை இட்டு இதற்காக கருத்து ரீதியான செயற்பாட்டை கொண்டு வந்த அமிர்தலிங்கம் உட்பட தமிழர்விடுதலைக் கூட்டணியில் உள்ளோர் உருவாக்கிது போலவே தற்போது கிழகிஸ்தானுக்கான பொருள் ரீதியானஇ கருத்துரீதியான வளங்கள் மேலோங்கி வருகிறது.

அதற்கு தெளிவான அடித்தளத்தை இந்த சிங்கள இனவாத வீர விதஹன இயக்கம் அடித்தளமிடுகிறது எனவே எதிர்காலத்தில் தேசியப்பிரச்சினை பல வழிகளிலும் உக்கிரமடையப் போவதால் ஒடுக்கப்பட்ட தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் இவைகளை விழிப்பாக அவதனித்து இனவாத வெறியாட்டத்தை தோல்வியடையச் செய்யும் பணிக்கு தோழ் கொடுக்க வேண்டும்.

## எமதுவாழ்த்துக்கள்

சோஷலிச மாணவர் சங்கத்தின் புதிய தேசிய அமைப்பாளராக தோழர் பிமல் ரத்நாயக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தேர்வு தொடர்பாக தற்போதைய தேசிய அமைப்பாளர் தோழர் அனுர குமார திஸாநாயக பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். மக்கள் விடுதலை முண்ணணியின் மாணவர் பிரிவே சோஷலிச மாணவர் சங்கமாகும். அதன் தற்போதைய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்காவிற்கு "செஞசக்தி" யின் வாழ்த்துக்கள்.

## அடக்குமுறைக்கு எதிராக அணிதிரள்வோம். அ.ப.மா.ஒ.அறிக்கை

பகிடிவதையை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு கல்வி உயர்கர்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 9 சட்ட மூலங்களும் அரசியலமைப்பை மீறப்படுகின்ற செயல்கள் என்று உயர் நீதிமன்றத்தினால் தீரப்பட்டு அதிலடங்கியிருப்பது அடக்குமுறை சட்டங்களே மறைந்திருக்கிறது என்று நாட்டுக்கு வெளிப்படுத்திய போதிலும் அச்சட்டமூலத்தை மீண்டும் கெண்டுவரக் கூடிய அளவுக்கு அரசாங்கத்தின் அரசியல் பண்பாடு சீரழிந்திருப்பதையே காட்டுகின்றது என்று கூறிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. அவ்வாறு சீரழிந்துள்ள அரசியல் கலாச்சார பண்பாட்டின் கீழ் எதிர்காலத்தில் மாணவர், விவசாயிகள், தொழிலாளர் ஆகியோர் தொடர்பாகவும் கடைப்பிடிக்க போகும் நடவடிக்கைகள் கண்டுபிடிப்பது இலகுவாகவே இருக்கின்றது.

8ம் பக்கத் தொடர்......
மைத்திரிபாலவின் காடையர்.........

பின்பு அவசர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்ட பின்பு அவர் இறந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவத்திற்கான காரணம் என்னவெனில் அவர் ஓர் படிப்பினைமிக்க விவசாயியாக வாழ்ந்து கொண்டு, ஜே.வி.பி யின் அரசியல் கருத்துகளை பரப்புவதில் முன்னோடியாக செயலபட்டதே இந்தக் கொலைக்கு முக்கிய காரணமென தெரியவருகிறது.

பா. உறுப்பினர் மைத்திரிபால சிரிசேன இந்த கொலைகாரனை பாதுகாப்பதற்காக தனது அதிகாரத்தை பயன்படுத்திய வண்ணமுள்ளான். அதே வேளை சம்பவம் தொடர்பான சகல விசாரணைகளையும் பொலன்னறுவை யு.ஞீ யால் மேற் கொள்ளப்படுகிறது. இந்த மிருகத்தனமான தாக்குகதல் தொடர்பாக பலர் சாடசியமளிக்க முன்வந்திருப்பதால், இப்போது மைத்திரபாலவின் வேட்டை அவர்களை நோக்கி திரும்பியுள்ளதாக தெரியவருகிறது.

இக்கொலை தொடர்பாக 'செஞ்சக்திக்கு' ஓர் விஷேட அறிக்கையை விட்ட ம.வி.மு பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா கூறியதாவது, நேரடியகவே இது அரசியல் படுகொலையான இதைபற்றி இப்போது நாம் எமது சர்வதேச தலமைப்பீடத்திற்கு அறிவித்துள்ளதாகவும், கொலைகளை கண்டித்து நாடுதழுவிய எதிர்பியகத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும், கூறினார் தொடர்ந்து அவர் கூறியதாவது, மக்கள் விடுதலை முன்னணியின் நாடுதழுவிய வளர்ச்சியை கண்டு கதிகலங்கி போயுள்ள பெ.ஜ.முன்னணி காடையர் வெறியாட்டம் ஆடிவருவதாக தெரிய வருவதாகவும் அவர் கூறினார்.

## 'மின்சாரம் தாக்கி, மக்கள் அவதி'

-நிஹால் கலப்பத்தி

ஏப்ரல் மாதம் முதலாம் திகதிமுதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பண்டங்களின் சேவை வரியின் கீழ் மின்சாரம் கட்டணம் 12.5% த்தால் உயர்த்துவதற்கு அரசாங்கத்தினால் தீர்மாணிக்கப்பட்டிருக்கும் முடிவினால் மக்கள் மென் மேலும் பாரிய திண்டாட்டத்திற்கு உள்ளாவர் என்று ஹம்பாந்தோட்டை பா-உ தோழர் நிஹால் கலப்பத்தி கூறிகிறார். இதுபற்றி அவரது அறிக்கையிலேயே இவர் மேல் கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் பண்டங்கள் சேவைக்கான வரியின் கீழ் மின்சாரத்திற்கு அறவிடப்படும் வரியை 12.5% த்தால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதேபோல் தொலைபேசி கட்டணம் இப்போது அறவிடபடும் தொகையிலிருந்து 80% அதிகரிப்பதற்கு (ரூபாய் 100 இருந்து 180 வரை) பொதுசன முன்னணி அரசாங்கம் தீர்மானித்திருக்கதககிறது.

சில காலமாக அரசாங்கம் மக்களுக்கு வரியை சுமத்தும் போது யுத்தத்தை பலிகடாவாக பயன்படுத்தினர். 1991 ஜனவரி முதலாம் திகதி 1% மாக இருந்த பாதுகாப்பு வரி 1995 ஜீலை முதலாம் திகதிக்கு 4.5% தால் அதிகரித்ததும் இவ்தவாறே. தொலைபேசி கட்டணத்திற்கு வரி 80% தால் அதிகரித்திருப்பது தந்தி சேவைக்கான வரி 4.5% துக்கு பிறம்பாகவே மின்சார கட்டணத்திலும் இதுபோலவே 12.5% ம் ஏபரல் மாதம் முதல் அதிகரித்துள்ளனர். இதன் பின்னாலிருந்து பாரிய சூழ்ச்சி என்னவெனில் இவைகளை படிப்பினையாககக் கொண்டு நாளை தண்ணீர், கேஸ், போக்குவரத்து, சில்லறை மொத்த வியாபாரம் போன்ற எல்ல சேவை பிரிவுகளுக்கும் இந்த அதிகரிப்பை செய்வதற்கு அரசாங்கம் தயார் நிலையில் உள்ளது.

17 வருடமாக யுத்தத்திற்த மறைந்துக்கொண்டு ஐக்கிய தேசிய கட்சியினர் பொருட்களின் விலைகளை உயர்த்தினர் மாறாக குறைக்கவில்லை. அன்று வாழ்க்கை சுமையை தாங்கிக்கொள்ள முடியாத மக்கள் 1994 ஆண்டின் பின்பு மக்கள் எதிர்பார்க்கது சுகபோக வாழ்க்கை அல்ல மிகவும் இலகுவான கஷ்டமற்ற வாழக்கையேயாகும். ஆயினும் இது நாள் வரை பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட எல்லாவிதமான வரி சீர்திருத்தின் ஊடாக பொருட்களின் விலைகளை உயர்த்தி, அதன் மூலம் மக்கள் வாழ்கையை கொண்டு போக முடியாத அளவுக்கு நெருக்கடியை அவர்கள் மீது சுமத்தியதேயாகும்.

12.5மூ த்தால் மின் கட்டணத்தை அதிகரித்து அதேவேளை முதலாவது (அலகு) கூறுகள் 90 க்காக வரிச்சலுகை வழங்குவதாக கூறி மக்களை அரசாங்கம் ஏமாற்றுகிறது. இந்த முதலாவது கூறுகள் 90 க்கான வரிச் சலுகை வியாபாரிகளுக்கோ தொழிற்சலைகளுக்கே அல்ல அதனல் அந்த சுமை மீண்டும் மக்கள் மீதே சுமத்தபடும். அதனால் பாதிப்படைவதும் மக்களே.

மக்களை கஷ்ட் நிலைக்கு உள்ளாக்கும் அதேவேளை தேசிய - விதேசிய முதலைகளுக்காக தனியார்மய கொள்ளையை முன்பை விட முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அரசாங்கத்திற்கு முடியுமாயிருப்பது. பாராளுமன்றத்தினுள் அதற்கு எதிரான விரிவான எதிர்ப்பு விவாதமும் இல்லாத காரணமேயாகும். 80% தால் தெலைபேசி வரியை உயர்த்தியது தொடர்பாக கடந்த மார்ச் 17ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுப்பதற்கு தீர்மானித்திருந்த போது, அதை நிறைவேற்றியது பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கும் ஜனநாயத்துக்கு சவால் விட்டே அதை ஏகமனதாக நிறைவேற்றினர். மக்களை ஒடுக்கும் வரி சீர்திருத்ததை உடனடியாக சுருட்டிக்கொள்ளும் படியும் அரசாங்கத்தை வற்புறுத்தும் அதேவேளை இதற்கு எதிராக விரிவான ஆர்பாட்டத்திற்காக அனைத்து முற்போக்கு வாதிகளும் அணிதிரளும்படி முற்போக்கு மக்கள் இயக்கங்களை கேட்டுக்கொள்கின்றோம்.

## வதைக்கும் சட்டமூலத்துக்கு எதிராக மாணவர் ஆர்பாட்டத்தில்



பொதுசன முன்னணி அரசாங்கத்தினால் கடந்த 22ம் திகதி சீர்திருத்தம் செய்யப்பட்ட வதைச் சட்டமூலம் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவினால் பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்து. அந்த சட்டமூலத்திற்கு எதிராக தமது வாக்குகளை பாவிக்கும்படி பா.ம.உறுப்பினர்களை வற்புறுத்தி பாராளுமன்றத்தின் முன்னால் மாணவ, மாணவிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். மேலே காணப்படுவது அதன் ஒரு பகுதியேயாகும்.




## தசநாயக கொலைக்கு எதிராக இத்தாலியில் ஆர்ப்பாட்டம்!



பொதுசன முன்னணி அரசாங்கத்தின் காடையர்களால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட பொலன்னறுவை பால எல்வெவயில் வசித்த தோழர் டி.ஜீ தசநாயகவை கொலை செய்த கொலைஞர்களுக்கு உரிய தண்டனையை வழங்கும்படியும், அனைத்து அரசியல் படுகொலைகளை உடன் நிறுத்தி இலங்கையில் பூரணமான ஜனநாயகத்தை நிலைநாட்டும்படி கேட்டு அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காக ம.வி.மு யின் இத்தாலி கமிட்டி சர்வதேச ஒத்துழைப்பு அமைப்புகளுடன் இணைந்து கடந்தமாதம் 20ம்திகதி இத்தாலியில் உள்ள இலங்கை தூதரகத்தின் முன்னால் வெற்றிகரமான எதிர்ப்பு ஆர்பட்டமொன்றை நடத்தியுள்ளனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் இன்றும் பல நாடுகளில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

www.padippakam.com


# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் சர்வதேச தலைமைப்பீடத்தின் முகவரியும் தொலைமடல் இலக்கமும்



ARUNODAYA, B.P.485, 75528 PARIS, CEDEX 11, FRANCE,
FAX: 0033 1 40330414

P.O.BOX 194, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA,
FAX: 0061 3 94369312


## முஸ்லிம் பிரபாகரன் உருவாவதற்கு முன்......

50 வருட பழமைவாய்ந்த இலங்கை முதலாளித்துவ அரசியலின் மூலம் நாடு இன்று பாரிய அழிவுக்கே முகம் கொடுத்தவண்ணமுள்ளது.

வடக்கிலும் தெற்கிலும் வெடிகுண்டுகளும் ரவைகளும் துறைந்த கூடிய – அளவில் வெடித்து சிதறுகின்றன அதேவேளை மூன்று வேளை உணவைக்கூட தேடிக்கொள்ள முடியாத அப்பாவி மக்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பேதமின்றி விஷமருந்தி மரணத்தை தழுவுகின்றனர். மது பாவனையில் இலங்கைக்கு முதலிடம். சிறிய நோய்களுக்கு கூட பரிகாரம் இல்லாத குழந்தைகள் நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கில் சாவை தழுவுகிறது. இவை 50 வருட முதலாளித்துவ அரசியலின் மகிமைகளின் சில துளிகள் மாத்திரமே.

ஆனால், இவ்வாறு நடைபெறும் அழிவுகள் முதலாளித்துவ அரசியலுக்கு போதாது என்ற வகையிலான காரணங்கள் தற்போது நடந்த வண்ணமுள்ளது. ஒரு இடத்தில் சிங்கள இனவாதமும், இன்னுமோர் இடத்தில் தமிழ் இனவாதத்தையும் பரப்பிவிடும் இந்நாட்டு பிழைப்புவாத முதலாளித்துவ அரசியல்வாதிகள் இன்று இவைகளோடு திருப்தியடையாது முஸ்லிம் மக்களையும் வெறிமிக்க இனவாத அழிவில் வீழ்த்துவதற்கு எத்தனித்த வண்ணமுள்ளனர். அவ்வாறான வெறித்தனமிக்க அழிவுகளுக்காக ஒரு புறத்தில் சிங்கள இனவாதிகள் தமது நடவடிக்கைகளை தயாரித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, மறுபுறத்தில் முஸ்லிம் முதலாளித்துவ அரசியல் வாதிகள் நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமிருக்கின்றனர்.

கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கேற்ப, கடந்த சில தினங்களுக்கு முன்பு கொழும்பு துறைமுகத்தின் ஊடாக பெரும் தொகையான ஆயுதங்கள் இரகசியமான முறையில் கிழக்கு பிரதேசத்தில் இயங்கும் முஸ்லிம் இயக்கம் ஒன்றுக்கு பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆயுதங்கள் அனுப்பி இருப்பது ஜிஹாட் எனப்படும் அபகீர்த்திமிக்க முஸ்லிம் அடிப்படைவாதிகள் சகிதம் தொடர்பு வைத்திருக்கும் நாடுகளேயாகும். அதேவேளை, இந்த முஸ்லிம் இனவாத ஆயுதக் குழுக்கள் மூலம் தமது அடிப்படைவாத வெறிக்கு ஒத்துழைப்பு வழங்காத முஸ்லிம் அரசியல் வாதிகள் சிலருக்கு மரண அச்சுறுத்தலிட்ட கடிதங்கள் அனுப்பபட்டுள்ளன.

மறுபுறத்தில் சிங்கள இனவாதிகள் வியாபாரிகள், பிக்குமார்கள் சிலரை சேர்த்துக்கொண்டு, ஐ.தே.க வினதும் அதிகாரமற்ற ஆதரவை பெற்று 'இராஜரட்டை' பிரதேசங்களுக்கு சென்று சிங்கள இனவாதத்தை பரப்பிய வண்ண முள்ளனர். முஸ்லிம் வியாபாரிகளுக்கோ, தமிழ் வியாபாரிகளுக்கோ நெல்லை விற்கவேண்டாமென இந்த வெறிகொண்ட இனவாதிகள் மக்களிடம் கூறுகின்றனர். இதனால் இந்நிலமைகளை கண்ட முஸ்லிம் மக்களோ அதிர்ச்சியுற்றுள்ளனர்.

தமிழ் மக்களை கொடிய இனவாத வெறியில் வீழ்த்துவதற்கு இவ்வாறான சிங்கள இனவாத செயல்பாடுகள் காரணமாயிருந்தன என்பது வரலாற்றை தெரிந்த எவரும் மறந்திருக்க மாட்டார்கள். இப்போது இவர்கள் தயாராகிக் கொண்டிருப்பது முஸ்லிம் சிவில் பிரசைகளை, இனவாத வெறியாட்டத்தில் அமிழ்ந்து தள்ளுவதற்கான செயல்பாட்டை சிங்கள இனவாத 'வீர விதான' மூலம் செய்து கொடுக்கவே சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதற்கு ஈடான முறையில் அஷ்ரப்பின் விடுதலை அமைப்புகளுக்கு ஆயுதங்கள் கிடைக்கின்றன. முஸ்லிம் பிரபாகரன் ஒருவனை உருவாக்குவதற்காகவே இவையனைத்திலும் நடைபெறுகின்றன. மனித பிணங்கள் மூலம் தமது மடியை நிரப்பிகொள்வதற்காக இப்பாதையில் செல்லும் இன்னுமோர் வியாபார கும்பலுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இவைகளை, ஒடுக்கப்பட்ட சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் மிகவும் பாரதூரமாக கருதி அவதானிக்க வேண்டிய விடயம் என்றே நாம் அறிவுறுத்துகின்றோம். இனவாதமென்பது சிங்களமோ, தமிழோ, முஸ்லிமோ யாரென்றாலும் இனவாதம் வெறித்தனமிக்கதாகும். ஒரு இனவாதம் இன்னுமோர் இனவாதத்தை தோற்றுவிக்கிறது. போஷிக்கிறது. நேற்று நடந்ததும் இதுவே, நாளை நடப்பதற்கு தயாரவதும் இதுவேயாகும்.

அழிவின் மூலம் துவண்டுபோயிருக்கும் நாம் முஸ்லிம் இனவாதத்தை உருவாக்குவதற்காக இந்த சிங்கள, முஸ்லிம் இனவாத பிழைப்புவாத அரசியல்வாதிகளுக்கும் சில வியாபாரிகளின் மரணப்பொறிக்கு இடமளித்து கைகட்டி வாய் மூடி பார்த்துக் கொண்டிருப்போமா? அல்லது, முளையிலேயே கிள்ளியெறிவதற்கான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை கட்டியெழுப்புவோமா..? பிரிந்து சாவோமா..? இணைந்து வெல்வோமா.....?

## ஆசியர், மாணவர், ஊழியர் உரிமைகளை புதைக்கும் சட்டமூலத்தை சுருட்டிக்கொள் !

☆ நிர்வாகத்துடன் கதைத்தால் ஏழு வருடம்.

☆ தங்கும் விடுதிகள் கேட்டால் பத்து வருடம்.

☆ உரிமைகளை கேட்டு போஸ்டர் ஒட்டினால் இருபது வருடம்.

☆ சட்டத்தின் முன்னால் சமன் என்ற உரிமையையும் மீறப்படுகிறது.


கல்வி உயர்கல்வி அமைச்சர் 1998 மார்ச் 17ம் திகதி புதிய சட்ட மசோதா ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்பித்தார். சட்டமூலத்தை சமர்பிக்கும் போது அமைச்சர் அதற்கான வழங்கிய கருத்தை 'கல்வி நிறுவனங்களில் பகிடிவதையும் இதன் போர்வையில் நடைபெறும் வன்முறை செயல்களும், கொடிய மனிததன்மையற்ற செயல்பாடுகளை இல்லா தொழித்தல்' போன்ற செயல்பாடுகளுக்கு எதிரான சட்டமூலமென்றே அமைச்சர் தெரிவிதார். ரிச்சர்ட் பத்திரன கருத்துக்களை கூறித்தாலும், இந்த சட்டமூலத்தின் மூலம் அரசாங்கம் எதிர்பார்ப்பது பகிடிவதையை ஒழிப்பதல்ல கல்விக்கான உரிமை இந்நாட்டு மக்களிடமிருந்து பறிக்கவும், அதை எதிர்ப்போரை சட்டத்தின் மூலம் நசுக்கவும் அரசாங்கம் பகிடிவதைக்குள் மறைந்துக்கொண்டு கொண்டுவந்த இந்த சட்டமூலத்தில் மறைந்திருப்பதெல்லாம், கொடிய சர்வாதிகாரத் தேவையே மறைந்திருக்கிறது.

இக்காரணி புலப்படுத்துவது என்னவெனில் சட்டமூலத்தில் மேலோட்டமாக இருக்கும் இனிப்பு மிக்க வாக்கியங்களில் அல்ல அதன் உள்ளேயிருக்கும் பயங்கர வாக்கியங்களுக்கிடையே யாகும். இவைகள் 1997 இல 15 கொண்ட குற்றவியல் சட்டத்தை விட ஒரு படிமேலே சென்று குறிப்பாக கல்விகான உரிமையை கேட்டு போராடுவதை தடுப்பதற்கும் அவ்வாறு போராடுவோரை, பல்கலைகழகத்திலிருந்து நீக்கவும், தண்டனை வழங்கவும் குறிப்பாக கூறுவதென்றால் கொலை குற்றவாளிக்கு கூட 3 மாதம் கடந்தவுடன் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்படும்ஆனால் மாணவர்கள் எந்தக் குற்றதிற்காக கைதுசெய்யப்பட்டாலும் 06 மாதத்துக்கு பிணை இல்லை.

இது அடிப்படை மனித உரிமையை மீறும் கொடுமை மிக்க சட்டமூலமென்றே சட்டதரணிகளின் கருத்தாகும். மனித உரிமைகளுக்கான சட்டமூலத்தில் உள்ளவாறு விரும்பிய இடத்தில் வசிக்கு உரிமை, போன்ற அடிப்டை உரிமைகளை கூட இச்சட்டத்தினால் மிறப்படுகிறது. அடிப்படை உரிமைகளுக்காக போரடினால் 10 வருடச்சிறை அல்லது 20 வருடம், விடுதிகளை கேட்டு போரடினால் 10 வருடம், இவைகள் தொடர்பாக நிர்வாகத்தோடு பேசினால் 07 வருடம்,

அரசாங்கம் மாணவர்களை மாத்திரமல்ல முற்போக்கு ஆசிரியர்கள், ஊழியர்களை, அடக்குமுறைச் செய்யவும், பழிவாங்கவும், தரக்குறைவாக நடத்தவும் இச்சட்டத்தின் அடங்கியுள்ளது. மேல் காணும் நடவடிக்கை கண்காணிக்கவும் தண்டனை வழங்கவும் நாட்டின் பொதுசட்டத்தின் சட்டமூலம் இருக்கும் அதேவேளை 'சட்டத்தின் முன்னால் யாவரும் சமன்' என்ற அடிபடை உரிமையையும் மீறி மாணவர், ஆசிரியர்கள், ஊழியர்கள் மாத்திரம் பாதிக்கும் படியான இந்த சனத் தனமான சட்டத்தை சகல முற்போக்கு வாதிகளும் கண்டிக்கவேண்டுமென செஞ்சக்தி கேட்டுக்கொள்கிறது.

## மைத்திரிபாலவின் குண்டர்கள் தசநாயகாவை கொன்றனர் !



மைத்திரிபாலவின் காடையர்களால் படுகொலை செய்யப்பட்ட தோழர் டி.ஜீ. தசநாயகாவின் உடல்

பொலன்னறுவை பா.உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் பகுல எல்லேவெல பிரதேச செயலாளர் தர்மவர்தன என்பவனால், அதே பிரதேசத்தில் வாழ்ந்த ஜே.வி.பி யின் முக்கிய உறுப்பினரான தோழர் டி.ஜீ. தசநாயகாவை மிருகத்தனமாக தாக்கி கொன்றுள்ளனர். கடந்த மாதம் 02ம் திகதி

இல :32– 5834 கொண்ட பச்சை நிற பஜரோ வாகனத்தில வந்த இந்த கொலைகாரன், அயலவர்கள் நூற்றுக்கு அதிகமானோர் பார்த்துக் கொண்டிருகையில் தோழர் தசநாயக தாக்கப்பட்டு, பின் தனியார் மருத்துவமனைக்கு கொண்டுசென்று அங்குவைத்தும் தாக்கி, இரவு 7.20 க்கு பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். அரலகங்வில பொலிஸார் அரலங்வில மருத்துவ மனைக்கு கொண்டு சென்று ஒப்படைத்த பின்பு குறிப்பிட்ட மருத்துவமனையில் மூலம் தோழர் தசநாயகாவை பெலன்னறுவை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

7ம் பக்கம் பார்க்கவும்............

## செஞ்சக்தியின் வேண்டுகோள்

மாதம் தோரும் வெளிவரும் மக்கள் விடுதலை முன்னணியின் தமிழ் பத்திரிகையான 'செஞ்சக்தி" தனது செயல்பாடுகளை விரிவுபடுத்த எண்ணியிருப்பதனால் சகோதர சகோதரிகளிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

குறிபாக

☆ கவிதை

☆ விமர்சனங்கள்

☆ செய்திகள்

ஆகியவைகள் தரமானவற்றை பிரசுரிக்கப்படும் எனவே உங்களது ஆக்கங்களை கிழ்காணும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

ஆசிரியர்
செஞ்சக்தி
198 19 பஞ்சிகாவத்தை வீதி
கொழும்பு.10.

படிப்பகம்